திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2026,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:10, Pages:56
May-2026, Price Rs.20/-



திருப்பதி
ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
23-05-2026 முதல் 31-05-2026 வரை









ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டாவில் அருள்புரியும் ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு 01-04-2026 அன்று நடைபெற்ற கல்யாணோத்ஸவத்திற்கு ஆ.மா. அரசு சார்பில் பட்டு வஸ்திரம் சமர்ப்பித்த மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு தம்பதியினர். பின்னர் முதல்வர் குடும்பத்தினருக்கு வேத பண்டிதர்கள் வேத ஆசீர்வசனம் செய்து தீர்த்த பிரசாதம், சேஷ வஸ்திரம், கோதண்டராம ஸ்வாமி சித்திர படம் வழங்கியபோது...







அவாச்யவாத3ாம்ச்ச ப3ஹூந்வதி3ஷ்யந்தி தவாஹிதா:।
நிந்த3ந்தஸ்தவ ஸாமர்த்2யம் ததோ து3:க2தரம் நு கிம்।।

உன்னுடைய எதிரிகள் உன்னுடைய திறமையை நிந்தித்துப் பலவிதமான கூறத்தகாத வார்த்தைகளையும் கூறுவார்கள். அதைவிட அதிகத் துயரம் கொடுக்கக்கூடியது வேறு என்ன இருக்கும்?

– ஸ்ரீமத் பகவத் கீதை 2-36



கொலுவை உன்னாடு3 வீடே3 கோ3விந்த3ராஜு
கொல கொல நேகி3 வச்சே கோ3விந்த3ராஜு

கொ3டு3கு3ல நீட3ல கோ3விந்த3ராஜு
கு3டி கெ3ான்ன படி3கெ3ல கோ3விந்த3ராஜு
குடி3யெட3ம காந்தல கோ3விந்த3ராஜு
கொடி3சாகே3 புவு ஜுல கோ3விந்த3ராஜு

கெ3ாப்ப கெ3ாப்ப பூத3ண்ட3ல கோ3விந்த3ராஜு
கு3ப்பேடி விஞ்ஜாமரல கோ3விந்த3ராஜு

கொப்புபை சுங்கு3ல தோடி3 கோ3விந்த3ராஜு
குப்பி கடாரமு தோடி3 கோ3விந்த3ராஜு

கெ3ாரபு3 சிங்க3ாரால கோ3விந்த3ராஜு
குருலு து3வ்வின்சுகொனி கோ3விந்த3ராஜு
திருபதிலோ நநு திரமை ஸ்ரீவேங்கடாத்3ரி
குரிசீ வரமு லெல்ல கோ3விந்த3ராஜு

கோவிந்த ராஜ ஸ்வாமி கூந்தலை பலவித அலங்காரத்துடன் கொண்டையைச் சுற்றி குஞ்சாரத்துடன் அலங்கரித்துக்கொண்டுள்ளார். எத்தனை எத்தனை மலர்கள்! அவற்றால் தொடுக்கப்பட்ட மாலைகளுடன் அழகாகக் காட்சியளிக்கின்றார். கண்களைக் கவரும் விதத்தில் கவசம், ஆபரணங்கள், ஆயுதங்களுடன், அனந்த சேஷனை தனக்கு குடையாகக் கொண்டு, இதர தேவதைகள் சாமரம் வீசிட, இரு புறங்களிலும் உபயதேவியரோடு கோவிந்த ராஜப் பெருமாள் கம்பீரமாக வீற்றிருந்து அனைவருக்கும் அருள்புரிந்து வருகின்றார். திருப்பதி பட்டிணத்தில் திருவேங்கடவனாக வரங்களை அள்ளி அருளும் கோவிந்த ராஜ ஸ்வாமியைப் பணிந்து அருள் பெறுவோம்.



–அன்னமய்யா

ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் - திருப்பதி

23-05-2026 முதல் 31-05-2026 வரை

23-05-2026, சனி
பகல் :
துவஜாரோஹணம்
இரவு :
பெரிய சேஷ வாகனம்

24-05-2026, ஞாயிறு
பகல் :
சிறிய சேஷ வாகனம்
இரவு :
ஹம்ஸ வாகனம்

25-05-2026, திங்கள்
பகல் :
சிம்ம வாகனம்
இரவு :
முத்துப்பந்தல் வாகனம்

26-05-2026, செவ்வாய்
பகல் :
கல்ப விருக்ஷ வாகனம்
இரவு :
சர்வ பூபால வாகனம்

27-05-2026, புதன்
பகல் :
மோகினி அவதாரம்
இரவு :
கருட சேவை

திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் 100 அடி தூரத்தில் மிக கம்பீரமான இராஜ கோபுரத்துடன் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம் காட்சியளிக்கும். இந்த ஆலயத்தில் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி உடன் ஸ்ரீபார்த்த சாரதி ஸ்வாமி, ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயார் (மஹாலக்ஷ்மி), ஆண்டாள் தாயார், சுதர்சன சக்கரத்தாழ்வார், இராமானுஜர், திருமலை நம்பி, அனந்தாழ்வான் மற்றும் ஆழ்வார்கள் சன்னதிகளும் அமைந்துள்ளன.

28-05-2026, வியாழன்
பகல் :
ஹனுமத் வாகனம்
மாலை :
வஸந்தோத்ஸவம்
இரவு :
யானை வாகனம்

29-05-2026, வெள்ளி
பகல் :
சூரியப்பிரபை வாகனம்
இரவு :
சந்திரப்பிரபை வாகனம்

30-05-2026, சனி
பகல் : திருத்தேர்
இரவு :
குதிரை வாகனம்

31-05-2026, ஞாயிறு
பகல் :
சக்கர ஸ்நானம்
இரவு :
துவஜாவரோஹணம்



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே-2026

மலர் 05 இதழ் 10

உள்ளுறை

	பக்கம்
நொடிப்பொழுதும் உன்னை பிரியேன்! -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.	7
சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: சூரியபீடம் -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை.	10
ஸ்ரீசத்யநாராயண ஸ்வாமி திருக்கோயில், அன்னவரம் - திரு. வி.ஓ. சுரேஷ், சத்திரவாடா.	12
ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும் - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி.	14
ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர்.	18
பக்ஷிகளும் பகவானும் -திரு.அ.ஜ. ரங்கராஜன், சென்னை.	20
108 திவ்வியதேச வைபவம் : திருஅயோத்தி - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.	22
தெய்வத்தாய் கைகேயி - பண்டிதமணி கு.அரங்கநாதாச்சாரியர், வரிச்சிக்குடி.	24
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: திருமலை அனந்தாழ்வான் -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை.	31
அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : அவ்வுலகை விரும்பாத ஸ்ரீஆஞ்சநேயர் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.	34
எச்சிலை உண்டதற்கும் முக்தி! - ஸ்ரீ உ.வே. அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சென்னை.	37
அன்னமய்யாவின் சிறப்பு மிக்க கீர்த்தனைகள் - திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.	41
ஆரோக்கியம் காப்போம்: ஓசையில் ஒளிந்து இருக்கும் ஆரோக்யம் -ஆயுர்வேத மருத்துவர் டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை.	44
ராசிபலன்கள் : மே 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.	47
நீதிக்கதை : முனிவர் வேண்டாத வரம் -டாக்டர். த. வெங்கடேஸ்வரா, அம்பத்தூர்.	48
சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி	49
சித்திரக்கதை : உயிரினைக் காத்த சுலோகம்	52

அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயதேவியருடன் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருப்பதி

பின்னட்டை : ஸ்ரீவீரவேங்கட சத்யநாராயண ஸ்வாமி, அன்னவரம்.

சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org

தனிப்பிரதி	ரூ.20/-
வருடச்சந்தா	ரூ.240/-
ஆயுள் சந்தா (12 வருடங்கள்)	ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா	ரூ.1,030/-

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியர் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்



உங்களுடன்

மாநிலமே மகாலட்சுமியின் இல்லம்

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: ।
சரீர யாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேத கர்மண: ॥ – பகவத் கீதை 3.8

பணி செய்யாமல் யாரும் இருத்தல் கூடாது. பணி செய்யாமல் இருப்பதைவிட பணி செய்வதுதான் மேன்மைதரும். பணி செய்தால்தான் வாழ்க்கையையே நடத்த முடியும். பணியே செய்யாமல் இருந்தால் வாழ்க்கை பயணமும் கடினமானதாகவே இருக்கும் என பகவத்கீதை உபதேசிக்கின்றது. திருநாவுக்கரசரும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று குறிப்பிட்டுள்ளதை அறியலாம். பணி செய்வது ஆரோக்கியத்திற்கும், செல்வத்திற்கும் ஆதாரமாக விளங்குகின்றது. ஆரோக்கியமும், செல்வமும் மகாலட்சுமியின் வடிவங்கள் ஆகும். மகாலட்சுமி வழிபாடு என்பது சோம்பேறித்தனத்தை விடுத்து சிறந்த முறையில் பணி செய்வதே ஆகும். சிலர் உடலளவில் பணி செய்தால், மற்றும் சிலர் தமது சிந்தனையளவிலும் பணி செய்து கொண்டிருப்பர். இவ்விரண்டிற்குமான அடிப்படை சம்பந்தம் உண்டு எனலாம். ஆதலால்தான் யாரும் யாரையும் குறைவாக எடைபோடுதல் கூடாது.

உத்யோகிநம் புருஷ சிம்ஹம் உபைதி லக்ஷ்மி
தைவேன தேயமிதி காபுருஷா வதந்தி ।
தைவம் நிஹத்ய குரு பௌருஷம் ஆத்மசக்த்யா
யத்னே க்ருதே யதி ந ஸித்தயந்தி கோऽத்ர தோஷ: ॥

யார் ஒருவர் உற்சாகத்துடனும், கடின உழைப்புடனும் பணி செய்கின்றாரோ அவரைத் தேடி மகாலட்சுமித் தாயாரே நேரில் வந்து அருள் புரிவாள் என்கிறது இச்சுலோகம். 'உத்யோகிநம்' – கடினமாக உழைத்திடும் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அவர்கள் சிங்கம் போன்றவர்களாவர். 'உபைதி லக்ஷ்மி' – அவர்களுக்கு அருள் புரிய மகாலட்சுமியே ஓடி வருவாள். "என்ன நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். நம் கையில் எதுவுமே இல்லை?" என்று பலர் வீணாகப் பேசித் திரிவர். அது தவறானது. தைவம் நிஹத்ய குரு பௌருஷம் ஆத்ம சக்தியா – ஆத்ம பலத்தோடு நம் கடமையை நாம் செய்தல் வேண்டும்.

ஜனகர், பிரகலாதன், அம்பரீசன், தர்மவியாதர், பகிரதன் ஆகியோர் தத்தமது கடமைகளைச் செய்து, அதன் மூலம் நற்செயல்களைச் செய்து, அவ்வழியிலேயே சென்று முக்கி அடைந்தனர். கடின உழைப்புதான் லௌகீக, ஆன்மீகத் தேடலுக்கானப் பாதையாகும். உழைப்பின் வாயிலாகத்தான் செல்வத்தையும் பெற முடியும். உழைப்பே ஒளிமயமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். உழைப்பு நிறைந்த வாழ்வின் அழகுக்கு ஈடு இணை இல்லை என்றே கூறலாம். உழைப்பில் அழகு மட்டுமல்ல மகிழ்ச்சியும் கலந்து இருக்கின்றது.

விவசாய நிலங்களிலும், தொழிற்சாலைகளிலும் சிறு சிறு வேலைகளைச் செய்திடும் அமைப்புச்சாரா தொழிலாளர்கள் இல்லையெனில் உற்பத்தியே ஸ்தம்பித்து போய் விடும். அதன் விளைவாக அனைவரின் வாழ்க்கைத் தரமும் பாதிக்கப்படும். அதனால்தான் உழைப்பை செல்வமாகவும், தொழிலாளர்களை செல்வத்தை உருவாக்குபவர்களாகவும் மதித்திட வேண்டும். ஆன்மீக அமைப்புகளிலும் தொழிலாளர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆன்மீகத் தலங்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான பல அடிப்படை வசதிகளை வழங்குவது முதற்கொண்டு கோயில் வளாகத்தைத் தூய்மையாக வைத்து அனைவரையும் மதிப்பது வரை பல்வேறு துறைகளில் பணிபுரியும் உழைப்பாளர்களிடமும் கடவுள் இருக்கின்றார் என்பதை உணர்வதே தொழிலாளர் தினத்தில் அவர்களுக்கு நாம் அளித்திடும் பெருமை ஆகும். உழைப்பு என்பது மகாலட்சுமியின் இருப்பிடமாகும். உழைப்பாளர்களே மகாலட்சுமியின் உண்மையான பக்தர்களாவர். உழைப்பே லக்ஷ்மிகரம் ஆகும்.

உழைப்பை மதித்திடுவோம்! உழைப்பாளர்களைப் போற்றிடுவோம்!!

நொடிப்பொழுதும் உன்னை பிரியேன்!





வைகாசி விசாகம். நம்மாழ்வாரின் திருநட்சத்திரம். நம்மாழ்வார் ஆழ்வார்கள் வரிசையிலும் வருவார். ஆசாரியார்கள் வரிசையிலும் வருவார். இரண்டு வரிசையிலும் அவர்தான் குரு. பிரபன்ன ஜனகூடஸ்தர். அதனால் குருவுக்குரிய விசாக நட்சத்திரத்தில் அவர் அவதாரம் நிகழ்ந்தது. குரு பரம்பரையைச் சொல்லும் பொழுது வேதாந்த தேசிகர் அழகாகச் சொல்லுவார்.

என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கு
யான் அடைவேயவர் குருக்க ணிரைவணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

கலியுகம் பிறப்பதற்கு முன் கண்ணன், தன் அவதாரத்தை முடித்துக் கொண்டு திருவடிச் சோதிக்கு எழுந்தருளினான். கண்ணனின் புனர் அவதாரமாக நம்மாழ்வார், கலியுகம் பிறந்து சில நாள்கள் மட்டுமே கழிந்த நிலையில், பூலோகத்தில் திருக்குருகூர் என்னும் திருத்தலத்தில் வைகாசி விசாகத்தில் அவதரித்தார்.

கிருஷ்ணரே வியாசராக அவதரித்து வடமொழி வேதங்களைத் தொகுத்துக் கொடுத்தார். அந்த கிருஷ்ணரே நம்மாழ்வாராக அவதாரம் செய்து தமிழ் வேதங்களைத் தொகுத்துக் கொடுத்தார். அதனால் நம்மாழ்வாரை *"வேதம் தமிழ் செய்த மாறன்"* என்று மதுரகவியாழ்வார் கொண்டாடுகிறார். சம்பிரதாயத்தில், கிருஷ்ணரின் மறுவடிவம்தான் நம்மாழ்வார் அவதாரம் என்பார்கள்.

நம்மாழ்வார் "நானா பாடினேன், என்னைக் கொண்டு தன்னைத் தானே பாடிக் கொண்டான் ஸ்ரீமந்நாராயணன்" என்று தமது திருவாய் மொழியில் சொல்வதைக் கவனிக்க வேண்டும்.

இதை இன்னும் விளக்கமாக கம்பர், சடகோபர் அந்தாதியில் நம்மாழ்வாரை பகவானின் பதினோராவது அவதாரமாக நிர்ணயிக்கிறார். அதற்கான காரணத்தையும் அந்தப் பாடலில் அவர் சொல்லுகின்றார்.

– பேராசிரியர்
எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

பகவான் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ள விரும்பினான். அவனைப் புகழ்வதற்கு வேறு யாராலும் முடியாத பொழுது, அவனே நம்மாழ்வாராக, இந்த உலகத்தில் உள்ளவர்கள் யாருமே அறியாத வண்ணம் அவதரித்து, திருவாய்மொழி மூலம் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டான் என்கின்ற செய்தியை மிக அற்புதமாகச் சொல்லுகின்றார்.

அந்தப் பாடல் இது...

பாவகத்தால் தன் திரு அவதாரம் பதி னொன்றென்றிப்
பூவகத்தார் அறியாத வண்ணம் தன்னையே புகழ்ந்து
நாவகத்தால் கவி ஆயிரம் பாடி நடித்தளித்த
கோவகத்தாற் கன்றி என் புறத்தார் செய் குற்றேவல்களே

வைகாசி விசாகத்தில் லோக குருவாகிய நம்மாழ்வார் அவதரித்ததும், திருவாய்மொழியைப் பாடியதும் குறித்து சுவாமி மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையிலே போற்றுகின்றார்

உண்டோ வைகாசி விசாகத்துக்கு ஒப்பொருநாள்
உண்டோ சடகோபர்க்கு ஒப்பொருவர் - உண்டோ
திருவாய்மொழிக்கு ஒப்பு தென்குருகைக்குண்டோ
ஒரு பார் தனில் ஒக்கு மூர்

நம்மாழ்வார் திருவேங்கடம் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். திருமலையப்பனிடம் ''புகல் ஒன்றுமில்லா அடியேன் உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே'' என்று தீர்க்க சரணாகதி செய்கின்றார்.

துவையார்த்தம் தான் திருவாய்மொழி. துவையார்த்தம் என்பது பிராட்டியும் பெருமாளும் இணைந்த சேர்த்தியிலே சரணாகதி செய்வதும், அவர்கள் இருவருக்கும் கைங்கரியம் செய்வதும் என்ற பொருளில் வரும்.

இவை இரண்டையும் திருவேங்கடமுடையான் விஷயத்திலே பாசுரங்களாகக் கொட்டித் தீர்த்தார் நம்மாழ்வார். அதில் ஒரு அற்புதமான பாசுரம். ஆறாம் பத்தில் பத்தாம் திருவாய்மொழி ஏழாம் பாசுரம்.

''உலகம் உண்ட பெருவாயா'' என்று தொடங்கும் திருவாய்மொழியில் எம்பெருமான் எதற்காக வைகுண்டத்தை விட்டு, திருமலைக்கு வந்து எழுந்தருளினான் என்பதைத் தெரிவிக்கிறார். நித்தியசூரிகளுக்கு மட்டும் முகம் தந்து கொண்டு இருந்த எம்பெருமான், சம்சாரி சேதனர்கள் உஜ்ஜீவிக்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு திருமலையிலே வந்து நின்றான். விண்ணவரும் மண்ணவரும் தன்னை நாடி வந்து வழிபடும்படியாக நிற்க திருமலை வசதியாக இருக்கிறது.

எம்பெருமானின் இந்த அளவற்ற கருணையை நினைந்து, பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு திருவேங்கடவனிடம் துவய மந்திர அர்த்தமாக சரண் புகுகிறார் நம்மாழ்வார்.

அதில் ஒரு பாசுரம்.

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே!
இமையோர் அதிபதியே,
கொடியா அடு புள் உடையானே!
கோலக் கனிவாய்ப் பெருமானே,
செடி ஆர் வினைகள் தீர் மருந்தே!
திருவேங்கடத்து எம் பெருமானே
நொடி ஆர் பொழுதும் உன பாதம்
காண நோலாது ஆற்றேனே



05	நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி புஷ்பயாகம்.
06-14	சித்தூர் மாவட்டம், கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்.
15	கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி புஷ்பயாகம்.
15-24	நாராயணவனம் ஸ்ரீசெண்பக வல்லி சமேத ஸ்ரீபராஸரேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்.
22	ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம்.
25-29	திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் தெப்போத்ஸவம்.
25	பெரியாழ்வார் சாத்துமுறை.
25-03	அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்.
26-28	திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்.
27	நாதமுனிகள் திருநட்சத்திரம்.

"அடியேன் அடைந்து அநுபவிக்கின்ற அமுதே! நித்திய சூரிகளுக்குத் தலைவனே! பகைவர்களைக் கொல்லுகின்ற கருடனைக் கொடியில் உடையவனே! அழகிய கோவைக் கனி போன்ற திருவாயினையுடைய பெருமானே! தூறு மண்டிக் கிடக்கின்ற தீவினைகளைத் தீர்க்கின்ற மருந்தே! திருவேங்கடத்து எம்பெருமானே! ஒரு சாதன அநுஷ்டானத்தைச் செய்யாதிருந்துங்கூட, உனது திருவடிகளைக் காண்பதற்குக் கணநேரமும் ஆற்ற மாட்டேன்" என்பது இந்தப் பாசுரத்தின் பொருள்.

காலத்தின் சிறு துணுக்கு நொடி. ஆன்மாவாகிய சேதனன், இறைவன் திருப்பாதத்தின் தொடர்பினைப் பெறும்போதுதான் பயனடைகிறான்.

பகவானின் திருப்பாதம் நம்மோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இறைவனின் திருவடியாக இருக்கக்கூடிய நம்மாழ்வாரை சடாரி ஆக்கி நம்முடைய தலையிலே சாதிக்கின்றார்கள். எம்பெருமானின் திருவடியை வருடி ஆனந்தம் காண்பது பிராட்டியின் நிலை. பிராட்டி விரும்பும் தேனே மலரும் திருவடிகளை ஆழ்வார்களும் ஆசாரியார்களும் ஆச்சரயிக்க விரும்புகின்றார்கள்.

அதனால்தான் ஸ்வாமிக்கு தீபாராதனை செய்யும் பொழுது திருவடி தரிசனத்தை மிக முக்கியமாகக் காட்டுவார்கள். அந்தத் திருவடியைத்தான் *"நொடியார் பொழுதும் உன பாதம் காணாது ஆற்றேனே"* என்கிறார் நம்மாழ்வார். எம்பெருமான் நினைத்தற்கரியவன். அளத்தற் கரியவன். விண்ணவர்களின் தலைவன். கருட வாகனத்தை உடையவன். வேதாத்மகன். கோலக் கனிவாய் பெருமாள். செடியான வினை தீர் மருந்து. மருத்துவனாய் நின்ற மா மணிவண்ணன். பிறவி என்னும் நோய்க்கு மருந்தானவன்.

தேவர்கள் அன்றொரு நாள் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தார்கள். அதில் அமுதம் வந்தது உண்மை தான். ஆனால், அந்த அமுதத்தோடு வந்தாள் பெண்ணமுது ஆகிய பிராட்டி. ஆனந்த அமுதமாகிய பெண்ணமுதை எம்பெருமான் திருமார்பில் ஏற்றுக்கொண்டான். அதனால் எம்பெருமானே ஆரா அமுதமானான். அதைத்தான் ஆழ்வார் சொல்லுகின்றார் *"அடியேன் மேவி அமர்கின்ற அமுதே"* என்கிறார் .

தேவர்கள் பெற்ற அமுதம் மூவா அமுதம். ஆனால் பிறவி என்னும் நோய்க்கு மருந்தல்ல. பிறவி என்னும் நோய்க்கு மருந்து எம்பெருமானாகிய ஆராவமுதம்தான். பொதுவாக ஒரு குறிப்பிட்ட நோய்க்கு மருந்து சாப்பிட்டு அந்த நோய் போய் இன்னொரு நோய் வருவது போல் இல்லாமல், எந்த நோயும் வராமல் மூல காரணமாகிய வினைகளைத் தீர்க்கக் கூடிய மருந்து எம்பெருமான்.

அதனால் திருவேங்கடமுடையானை *"செடியார் வினைகள் தீர் மருந்து"* என்று அழைத்தார் நம்மாழ்வார். இதைத்தான் குலசேகர ஆழ்வாரும் *"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே"* என்று தம்முடைய பெருமாள் திருமொழியிலே திருவேங்கடமுடையானைப் பாடுகின்றார்.

பிறவிகள் ஒன்றிரண்டு என்றால் ஏதாவது பிராயச்சித்தம் செய்து போக்கிக் கொள்ளலாம். ஆனால் பற்பல பிறவிகளின் பாவத்தொகுப்பு (சஞ்சித வினைகள்) பாரமாய் பழவினைகளாக காடு போல் மண்டிக் கிடக்கின்றன. செடி போல் மண்டிக் கிடக்கும் பாபமூட்டைகளை என் செய்வது? அதை அனுபவிக்க வேண்டும் என்பதற் காகவே தானே பற்பல பிறவிகள் எடுக்க வேண்டி இருக்கிறது. எனவே இதற்கு மொத்தமாக ஒரு மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னால் அது திருவேங்கடமுடையான். அதனால் அவனை *"செடியார் வினை தீர் மருந்து"* என்று அழைத்தார் நம்மாழ்வார்.

இந்த மருந்தை பெற தேவர்கள் போல் சிரமம் வேண்டியதில்லை. திருமலைக்குப் போனால் போதும். பாற்கடலில் வந்த பிராட்டி எம்பெருமான் மார்பில் அமர்ந்து, அந்த எம்பெருமான் திருவேங்கடமுடை யானாக நம்மாழ்வாரின் திரு உள்ளத்தில் வந்து அமர்ந்தான்.

எனவே திருவேங்கடமுடையான் அருள் பெற வேண்டும் என்று சொன்னால் ஆழ்வாரின் திருவருளைப் பெற வேண்டும். வைகாசி விசாகத்தன்று அந்த ஆழ்வாரின் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி, ஆழ்வார் பல்லாண்டு பாடிய திருவேங்கடமுடையான் திருவடிகளுக்கும், அவர் பாசுரத்தை ஓதி பல்லாண்டு பாடுவோம்.

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

படிமக் கலைஞர் திரு. ப. சரவணன்,
குடந்தை, 9443171383



தமிழ்நாட்டிலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் மாமன்னன் இராஜராஜ சோழன் மகனான மாமன்னன் இராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்டு 250 ஆண்டுகள் பிற்கால சோழ பேரரசின் தலைநகரமாக விளங்கிய தலமாகும். இத்தலத்தில் இவனின் கால கலைப் படைப்பாக உலகப் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீபிரகதீஸ்வரர் திருக்கோயில் அமையப்பெற்றுள்ளது.

இவ்வாலய மகாமண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில் நவக்கிரகம் என அழைக்கப் பெறுகின்ற ஒரு சிற்பம் வழிபாட்டிலுள்ளது. மிக அரிதான வகையில் அமையப் பெற்றுள்ள இச்சிற்பம் பற்றி ஆய்வாளர்கள் எடுத்து உரைத்துள்ள கருத்துக்கள் உங்கள் பார்வைக்கு :

மாமன்னன் இராஜேந்திரச் சோழனின் வெற்றிச் சின்னமாக நுளம்பபாடி நாட்டிலிருந்து கொண்டு வந்த இச்சிற்பம் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று தொல்லியல் நிபுணர்கள் கருதுகின்றனர். இச்சிற்பத்தேரில் பாயும் நிலையில் ஏழு குதிரைகளும்

சூரிய பீடம்



அவைகளுக்கு மேலாக நடுவே அமர்ந்த நிலையில் இத்தேரினைச் செலுத்தும் வண்ணம் அருணனின் உருவமும், இவைகளுக்கு மேல் சதுர பீடமொன்றின் நடுவே அலர்ந்த தாமரை மலரொன்றும் காணப் பெறுகின்றது.

இக்குதிரைகளுக்கு இருமருங்கும் அமர்ந்த நிலையில் இருவர் உள்ளனர். அம்மலரின் எட்டுத் திசைகளிலும் அமர்ந்த நிலையில் எண்மர் காணப் பெறுகின்றனர். அவர்களின் தலைக்குப் பின்புறம் ஒளி வட்டம் காணப்பெறுகின்றது. அவர்கள் தம் வலது திருக்கரத்தில் தாமரை மலரை ஏந்தியுள்ளனர். இடது திருக்கரத்தில் சிறிய நீர்ச்சொம்பு திகழ்கின்றது. இப்பீடத்தின் நான்கு மூலைகளிலும் ஒரு திருக்கரத்தில் தாமரை மலரும், மற்றொரு திருக்கரத்தில் மணி அலங்காரம் செய்யப்பெற்ற ஆடையையும் ஏந்தியவாறு, ஒரு காலை பக்க வாட்டில் மடக்கியும், மற்றொரு காலை பின்புறம் நீட்டி உயர்த்தியும் விண்ணில் மிதக்கும் நிலையில் கந்தர்வர் உள்ளார்.

மேற்காணும் சிற்பத்தின் சிறு விளக்கம்

அலர்ந்த தாமரை மலர் சூரியனின் மறு வடிவம். அதன் எண்திசைகளிலும் அமர்ந்து காணப்பெறுபவர்கள் இந்திரன், அக்நி, இமயன், நிருதி, வருணன், வாயு, சோமன், ஈசானன் என்னும் எண்மர் எனும் அஷ்டதிக் பாலர்கள் ஆவர் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது இச்சிற்பம்.



கங்கை கொண்ட சோழீச்சரமம்

இத்திருக்கோயிலுக்கு வருகைபுரிவோர் இந்த சூரிய பீடத்தினை நிச்சயம் கண்டு தரிசித்தல் வேண்டும். இந்திய சிற்பக்கலை மரபின் உச்சத்தையும், அதனை வெற்றிச் சின்னமாக எடுத்து வந்த மாமன்னன் இராஜேந்திர சோழனின் ஆன்மிக இரசனையும் எத்தனை மகத்துவ மானது. பிரபஞ்சத்தை ஸ்ரீசூரியதேவனின் தலைமையில் அஷ்டதிக்தேவர்கள் நாளும் வலம் காணுவதை ஒரு சிறிய கலைப் படைப்பிற் குள் அடக்கிக் காட்டி இருப்பது நுளம்பர் கால சிற்பக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பின் குறிப்பு

நவக்கிரக சிற்பம் என்று பக்தர்களால் அழைக்கப்படும் மேற்காணும் ஸ்ரீசூரியபீடச் சிற்பம் போல் குவாலியர் அருங்காட்சியகத்தில் உள்ள ஒன்பதாம் நூற்றாண்டினைச் சார்ந்த பிரதிகாரர் சிற்ப மரபில் வடிக்கப்பெற்ற ஒரு சிற்பப் படைப்பும், ஹைதராபாத் அருங்காட்சி யகத்தில் உள்ள பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த காகதீயர் மரபில் படைக்கப் பெற்ற ஒரு சிற்பப் படைப்பும், கங்கை கொண்ட சோழபுரத்து ஸ்ரீசூரியபீடமும் ஒரு சில அம்சங்களில் ஒத்துக் காணப் பெறுகின்றன என இராஜேந்திர சோழன் நூலாசிரியர் குடவாயில் பாலசுப்பிரமணியம் எடுத்துரைக்கிறார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

ஸ்வாமி புஷ்கரணி :

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் உடல் சுத்தத்துடன் மன சுத்தியும் ஆகிறது.

ஆகாச கங்கை :

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

பாபவினாசம் :

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் இருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

தி.தி.தே. வனத்தோட்டம் :

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க் கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

புவியியல் வளைவு (சிலாதோரணம்) :

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

நாதநீராஜன மண்டபம் :

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப் படுகின்றன.

ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :

அபூர்வமான புராணப் பொருட்களோடு மட்டு மல்லாமல் சித்திரம், சிலை கைவண்ண கலை வேலைப் பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானைத் தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சமைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

நாகுல பாவி (கிணறு)

ஒரு பெரிய பாறையில் நாகங்களின் சிற்பங்கள் வடிக்கப்பட்டு அதனருகில் ஒரு திருக்குளம் உள்ளது. வராக ஸ்வாமி விருந்தினர் விடுதி எதிராகச் செல்லும் சாலையில், சேவாசதன் பின்புறம் உள்ள பாட்ட ஸ்ரீகங்கை அம்மன் ஆலயத்திலிருந்து சிறிது தூரம் சென்று இடதுபுறம் திரும்பினால் நாக தீர்த்தத்தைச் சென்றடையலாம்.

ஸ்ரீசத்யநாராயண ஸ்வாமி திருக்கோயில், அன்னவரம்

- திரு. வி.ஓ. சுரேஷ்,
சத்திரவாடா.



தல வரலாறு

அன்னவரம் புனிதமான ரத்னகிரி மலையில் அமைந்துள்ளது. முக்கிய மலைகளில் ஒன்றான புகழ்பெற்ற மேரு மலை, தனது மனைவி மேனகாவுடன் ஸ்ரீமந்நாராயணனை நோக்கி கடும் தவம் செய்தது. அவர்களின் தவத்தினால் மகிழ்ந்த நாராயணன், அவர்களுக்கு பத்ரா மற்றும் ரத்னாகரர் என்ற மக்கட்பேற்றை அருளினார், அவர்கள் இருவரும் மலைகளாகப் பிறந்தனர். பத்ரா ராமபிரான் வசித்திட பத்ராசலமானான். ஸ்ரீவீர வேங்கட சத்யநாராயண ஸ்வாமி எழுந்தருள் புரிந்திட ரத்னாகர் ரத்னகிரி மலையானான். இதுவே ரத்னாசலம் என்றும் அழைக்கப்படுகிறது. மேருவின் மகனான ரத்னாகர் தவமிருந்து இங்கு திருக்கோயிலை அமைத்தார் என்று கூறப்படுகிறது.

சதாவு, லீலாவதி என்ற தம்பதிகளுக்கு நீண்ட காலம் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்தது. தங்களுக்குக் குழந்தை பிறந்தால் சத்யநாராயண ஸ்வாமிக்கு விரதம் இருப்பதாக வேண்டிக் கொண்டனர். சத்யநாராயண ஸ்வாமியின் திருவருளால் அவர்களுக்கு பெண் குழந்தையும் பிறந்தது. குழந்தை பிறந்ததும் லீலாவதி விரதம் குறித்து கணவனுக்கு எடுத்துரைத்தும், கணவனோ நம் பெண்ணிற்கு திருமணம் நடைபெற்றதும் செய்யலாம் என்றான்.

திருமணமும் நடந்தேறியது. திருமணத்திற்குப் பின்பும் பூஜையை மேற்கொள்ளாததால், சதாவுக்கும், ரத்னாகரருக்கும் வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. மேலும் அரச பழி, சிறைவாசம் என்று தெல்லைகள் உண்டாயின. அப்போது ஒரு இல்லத்தில் சத்யநாராயண பூஜை நடைபெறுவதைக் கண்டு அங்குச் சென்று பிரசாதம் பெற்றனர். பின்னர் ஏழ்மை நிலையிலும் லீலாவதி சத்யநாராயண விரதத்தை மேற்கெண்டாள். விரதம் முடிந்ததும் இழந்த செல்வங்கள் யாவும் மீண்டும் திரும்பக் கிடைத்தன. இறுதியில் ரத்னாகர், குன்றாக மாறி தன்னில் சத்யநாராயண ஸ்வாமியை ஸ்தாபித்தான். கலாவதியும் பம்பா நதியாக மாறினாள் என்று கந்த புராணம் கூறுவதாக மற்றொரு வரலாறும் கூறுவதுண்டு. ரத்னகிரி மலை கடல் மட்டத்திலிருந்து சுமார் 300 அடி உயரத்தில் அமைந்து உள்ளது.

ஒருநாள் அந்நாட்டு மன்னரின் கனவில் இறைவன் தோன்றி இங்குள்ள மலையில் தான் தோன்றப்போவதாகவும், தனக்கு ஒரு ஆலயத்தை அமைத்திடும்படியும் கூறினாராம். மன்னரும் ஆவணி மாத வளர்பிறையில் இந்த இடத்தில் ஒரு கோயிலை ஏற்படுத்தினார். இந்தப் புகழ்பெற்ற கோயில் ரத்னகிரி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.

இங்கு எப்போதும் அன்னதானம் நடைபெற்றுக் கொண்டே இருப்பதால் இவ்வூர் அன்னவரம் என்ற பெயர் பெற்றது. அனின வரம் என்றால் தமிழில் கேட்டவரம் என்று பெருள்படும். இத்தலத்தில் எழுந்தருள்புரிந்து கெண்டிருக்கும் ஸ்ரீசத்யநாராயண ஸ்வாமி கேட்ட வரங்களை அளிப்பதால் அனினவரம் என்பது அன்னவரம் என்று மறு விதாகவும் கூறப்படுகிறது.

சத்ய நாராயண பூஜை



ஆந்திர மாநிலம், காகிநாடா மாவட்டம், அன்னவரத்தில் ஸ்ரீசத்யநாராயண ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது.

கலியுக மக்கள் துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கான ஒரு வழியைக் கூற வேண்டும் என மகாவிஷ்ணுவிடம் நாரதர் முறையிடுகிறார். அதற்கு மகாவிஷ்ணு நாரதரிடம் ஸ்ரீசத்யநாராயண பூஜையும் விரதத்தையும் மேற்கொண்டாலே போதும் துன்பங்கள் யாவும் விலகிடும். நானே ஹரிஹர பிரும்மரூபமாக அன்னவரத்தில் ஸ்ரீசத்யநாராயணராக விளங்குகிறேன் என்று கூறினாராம்.

சித்ரா பௌர்ணமியிலோ, ஆவணி மாத பௌர்ணமியிலோ ஸ்ரீசத்யநாராயண பூஜையையும், விரதத்தையும் மேற்கொள்வர். புதுமணத் தம்பதிகள் திருமணமான அந்த வருடமே அன்னவரத்தில் அருள்புரியும் ஸ்ரீவீர வேங்கட சத்யநாராயண ஸ்வாமியைத் தரிசித்து, கோயில் வளாகத்திலேயே ஸ்ரீசத்யநாராயண பூஜையைச் செய்து விரதமும் அனுசரிப்பர். மேலும், கிரக சாந்திக்காக வீடுகளில் குடியேறும் போதும் ஸ்ரீசத்யநாராயண ஹோமம் மேற்கெள்வர். வாழ்கையில் உண்டான இன்னல்களில் இருந்து விடுபட பௌர்ணமி தோறும் விரதமிருந்து ஸ்ரீசத்யநாராயண பூஜையைச் செய்வோறும் உண்டு.

திருக்கோயில் அமைப்பு

லிங்க ரூபமாக கயிலைநாதனும், ஸ்ரீசத்யநாராயண ஸ்வாமியாக மகாவிஷ்ணுவும், அனந்த லட்சுமியும், கரு வறையில் ஒரே பீடத்தில் காட்சி தருகின்றனர். இத்திருக் கோயில் ஒரு பெரிய தேர் போன்ற அமைப்புடனும், நான்கு புறமும் அழகான பெரிய சக்கரங்களுடன் அமைந்து உள்ளது சிறப்பாகும். பிராகாரத்தைச் சுற்றி வரும் போது சத்யநாராயண விரதம் செய்வதற்கான சிறு ஹோம குண்டங்களும் காட்சி அளிக்கின்றன.

இத்திருக்கோயிலின் அடித்தளத்தில் மந்திரிபாத் விபூதி வைகுண்ட மஹா நாராயண தன ஜன ஆகர்ஷன யந்திரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அதன்மேல் விஷ்ணு பஞ்சாயுத யந்திரம் உள்ளது. இப் பீடத்தின் மேல்தளத்தில்தான் ஸ்ரீசத்ய நாராயண ஸ்வாமி அருள்புரிகின்றார்.

யந்திரத்துக்கு நாற்புறமும் விநாயகர், சூரியநாராயணர், பால திரிபுர சுந்தரி மற்றும் மகேஸ்வரர், ராமர் சன்னதிகளும் அமைந்து உள்ளன.

திருவிழாக்கள்

வைகாசியில் திருக்கல்யாணம், ஆவணி யில் ஜெயந்தி உத்ஸவம், நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி என முக்கிய திருவிழாக் களும் கொண்டாடப்படுகின்றன.



முதல் கூர்ணை :

மஹாவிபூதே: ஸ்ரீமத: சரணாரவிந்தயுகளம் அநந்யாத்ம
ஸஞ்ஜீவநேந தத்கத ஸர்வபாவேந சரணம் அனுவ்ரஜேத

பூலோகத்தைவிட பலமடங்கு பெரியதாயுள்ள ஸ்ரீவைகுண்டத்திலே பெரியபிராட்டியாரோடு சேவை சாதிக்கும் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களைப் பற்றாசாகக் கொண்டு அவ்வெம்பெருமானின் திருவடிகளிலே சரணம் அனுஷ்டித்து மோட்சம் அடைவதுதான் ஜீவாத்மனுக்கு கிடைத்தற்கரிய மிகப்பெரிய புருஷார்த்தமாகும். *"மணந்த பேராயா மாயத்தால் முழுதும் வல்வினை யேனை ஈர்க்கின்ற குணங்களையுடையாய்"* திருவாய்மொழி 8–1–8,



ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும்



ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம்
சரணம் வ்ரஜ
அஹம்த்வா ஸர்வபாபேப்யோ:
மோக்ஷயிஷ்யாமி மாஸுச

–பகவத்கீதை –சரமசுலோகம் 18–66

அனைத்து உபாயங்களையும் கைவிட்டு என்னை மட்டுமே உபாயமாகச் சரண் அடைவாய். அனைத்து பாவங்களிலிருந்தும் உன்னை விடுவித்துவிடுவேன். நீ வருந்த வேண்டாம்.

ந தர்மநிநிஷ்டோஸஸ்மி ந சாத்ம
வேதி நபக்திமாம்ஸ்த்வச் சரணாரவிந்தே
அகிஞ்சநோஸ நந்யகத்திஸ் ஸரண்ய:
த்வத்பாதமூலம் ஸரணம் ப்ரபத்யே

– ஸ்தோத்ரரத்னம் – 22

எம்பெருமானே! அடியேன் கர்ம ஞான யோகங்களிலே நிலைநின்றவன் அல்லன். தேவரீரின் திருவடித்தாமரைகளில் பக்தி உடையவனும் அல்லன். எந்தவொரு உபாயமும் அற்றவனான அடியேன் தேவரீரின் திருவடித் தாமரைகளையே உபாயமாகப் பற்றி சரணடைகிறேன்.

பெறர்கரிய நின்ன பாத பத்தியான பாசனம்
பெறற்கரிய மாயனே! எனக்கு நல்க வேண்டுமே

– திருச்சந்தவிருத்தம் 100

மாதுகிலின் கொடிக்கொள் மாடவடமதுரைப்பிறந்த
தாதுசேர்தோள் கண்ணன் அல்லாலில்லை
கண்டீர் சரணே

– திருவாய்மொழி 9–1–9

ஓயுமூப்புப் பிறப்பிறப்பு பிணி வீயுமாறு செய்வான்
திருவேங்கடத்
தாயன் நாண்மலராம் அடித்தாமரை வாயுள்ளும்
மனத்துள்ளும் வைப்பார் கட்கே

– திருவாய்மொழி 3–3–9

ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்
தந்தொழிந்தாய் உனக்கோர் கைம்
மாறு நான் ஒன்றிலேன் எனதாவியும் உனதே

– திருவாய்மொழி 5–7–10

சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெலாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்
– திருவாய்மொழி 9–10–5

இரண்டாவது சூர்ணை :

ததஸ் ச பிரத்யஹம் ஆத்மோஜ்ஜீவநாய ஏவம்
அநுஸ்மரேத் ததஸ்ச பிரத்யஹம்
ஆத்மோஜ்ஜீவநாய ஏவம் அநுசஸ்மரேத்

இரண்டாவது சூர்ணையில் பேற்றுக்கு சரணம் அனுஷ்டித்தல் ஒரு முறையே போதுமென்றாலும் மனம் வேறொன்றில் ஈடுபடாமல் இருப்பதற்கு நித்ய அனுசந்தானமாக சரணம் அனுஷ்டித்தல் அவசியம் எனவும் எம்பெருமானார் அருளுகிறார்.

நண்ணி நானுன்னை நாடொறுமேத்தும்
நன்மையே அருள்செய் எம்பிரானே
– பெரியாழ்வார் திருமொழி 5–1–8

தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி
வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது
– நான்முகன் திருவந்தாதி – 63

கைகளால் ஆரத்தொழுது தொழுதுன்னை
வைகலும் மாத்திரைப் போதுமோர் வீடின்றி
பைகொள் பாம்பேறி உறைபரனே உன்னை
மெய்கொள்ளக் காண விரும்பும் என்கண்களே
–திருவாய்மொழி 3–8–4

நாடொறும் வீடின்றியே தொழக்கூடுங்கொல்
நன்னுதலீர்
– திருவாய்மொழி 5–9–8

அநந்யசேதா: ஸததம் யோமாம் ஸ்மரதி நித்யச:
தஸ்யாஹம் ஸுலப: பார்த நித்யயுக்தஸ்ய
யோகிந:
– பகவத்கீதை 8–14

பார்த்தனே! எந்த நேரத்திலும் வேறு எதிலும் தனது மனதினைத் திருப்பாமல் என்னை மட்டுமே தனது சிந்தனையில் நிலைநிறுத்தி அனைத்து காலங்களிலும் என்னை உபாசனை செய்யும் ஒருவனுக்கு நான் மிக எளிதில் கிட்டிவிடுபவனாக உள்ளேன்.

மூன்றாவது சூர்ணை ஸ்ரீவைகுண்டம் :

சதுர்தஸ புவநாத்மகம் அண்டம் தஸகுணி
தோத்தரம் ச ஆவரணம் ஸப்தகம்
ஸமஸ்தம் கார்ய காரண ஜாதம் அதீத்ய பரம
வ்யோம ஸப்தாபிதேயே ப்ரஹ்மாதீநாம்
வாங்மநஸா அகோசரே ஸ்ரீமதி வைகுண்டே

ஸ்ரீவைகுண்டம்

நித்ய விபூதியான ஸ்ரீவைகுண்டத்திலே சேவை சாதிக்கும் எம்பெருமான் லோகபரிபாலனம் செய்து அருள, லீலாவிபூதியாக பற்பல அண்டகடாகங்களைப் படைத்தருளுகிறார். நித்யவிபூதியின் பிரம்மாண்டமான விஸ்தீரணத்தை நோக்குகையில் இந்த அண்டகடாகங்கள் ஒரு சிறு துளி என்பது பூர்வர்கள் திருவுள்ளம். ஒரு அண்டகடாகம் என்பது பதினான்கு லோகங்களையும், அதனைச் சூழ்ந்த ஏழு ஆவரணங்களையும் உள்ளடக்கியது.

பூலோகத்திற்கு கீழே ஏழு உலகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் பதினாலாயிரம் யோசனை விஸ்தீரணம் உடையவை. இவற்றுக்கு மேலே உள்ள பூலோகம் எழுபதினாயிரம் யோசனை விஸ்தீரணம் உடையது. பூலோகத்திற்கு மேலே சூரியன் வரையில் நூறாயிரம் யோசனை விஸ்தீரணத்தில் கந்தர்வர்கள் வாழும் புவர்லோகம் உள்ளது. இதற்கு மேலே துருவன் வரையில் பதினாலாயிரம் யோஜனை விஸ்தீரணத்தில் நட்சத்திரங்களும் கிரகங்களும் வாழும் சுவர்லோகம் உள்ளது. இதற்கு மேலே ஒருகோடி யோஜனையில் இந்த்ராதி தேவர்கள் வாழும் மகர்லோகம் உள்ளது. இதற்கு மேலே இருகோடி யோஜனையில் சனகாதி முனிவர்கள் வாழும் ஜனர்லோகம் உள்ளது. இதற்கு மேலே எட்டுகோடி யோஜனையில் ப்ரஜாபதிகள் வாழும் தபோலோகம் உள்ளது. இதற்கு மேலே நாற்பத்தெட்டுகோடி யோஜனை விஸ்தீரணத்தில் பிரம்மா, சிவன் உள்ளிட்ட தெய்வங்கள் வாழும் சத்ய லோகம் உள்ளது.

நம்பனே! நவின்றேத்த வல்லார்கள் நாதனே
நரசிங்கமதானாய்!
உம்பர்கோன் உலகேழும் அளந்தாய்!
– பெரியாழ்வார் திருமொழி 5–1–9

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய் மூவடி
நீரொடும் கொண்டு
பின்னும் ஏழுலகும் ஈரடியாக
– பெரிய திருமொழி (9–1–5)

இந்த பதினான்கு லோகங்களை ஜலம், தேஜஸ், வாயு, ஆகாயம், அஹங்காரம், மகத், அவ்யக்தம் எனும் ஏழு ஆவரணங்கள் சூழ்ந்துள்ளது. இதுவே ஒரு அண்டகடாகம் எனப்படும் எம்பெருமானின்

லீலாவிபூதியின் ஒரு சிறு பகுதியாகும். எண்ணி றைந்த கோடிக்கணக்கான அண்டகடாகங்களுக்கு மேலே சுத்தசத்வமயமான காலம் நடையாடாத மிகவும் தேஜோமயமான திருநாடு எனப் போற்றப்படும் ஸ்ரீவைகுந்தம் உள்ளது.

அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்ய
யுதாநி ச
ஈத்ருஸாநாம் ததாதத்ர கோடிகோடி ஸதாநி ச

– விஷ்ணு புராணம்2–7–27

ப்ரக்ருதியில் இம்மாதிரியான பலகோடி நூறாயிரம் அண்டங்கள் இருக்கின்றன.

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவாற்குக் கோயில்போல்

– மூன்றாம் திருவந்தாதி 61

காப்பாய் நீ காப்பதனை யாவாய் நீ வைகுந்தம்
ஈப்பாயும் எவ்வுயிர்க்கும் நீ.

– நான்முகன் திருவந்தாதி –19

வைகுந்தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு
வைகுந்தம் என்றருளும் வான்

– பெரிய திருவந்தாதி –53

விண்ணைத் தொழுதவன் மேவு வைகுந்த
மென்று கைகாட்டும்

– திருவாய்மொழி 4–4–1

பண்ணின்பம் வரப்பாடும் பத்தருள்ளார்
பரமான வைகுந்தம் நண்ணுவரே

– பெரியாழ்வார் திருமொழி 3–4–10

கூறின அந்தாதி ஓராயிரத்துள் இப்பத்தும்
கூறுதல் வல்லார் உளரேல் கூடுவர் வைகுந்தமே

– திருவாய்மொழி 2–5–11

பூலோகத்திலே பிராகிருத உடம்பெடுத்து பிறப்பெடுக்கும் ஜீவன் பற்பல சித்தாந்தங்களிலே மதி மயங்கி கர்ம ஞானம் உள்ளிட்ட யோகங்களைக் கைக்கொண்டு கர்மவினை முற்றிலும் ஒழியாமல் அண்டகடாகத்திலேயே மீண்டும் மீண்டும் பிறந்து நற்கதியடையாமல் உழன்றிருக்கும்.

ஆழ்வார் ஆசாரியர்கள் அருளிய சரணாகத மார்க்கத்தை கைக்கொண்ட பாகவதோத்தமர்கள் கர்மவினை முற்றிலும் ஒழிந்தவர்களாய் அர்ச்சிராதி மார்க்கம் எனப்படும் ஒளிவழிப்பயணத்தில் அண்டகடாகத்தைக் கடந்து எம்பெருமானின் நித்ய விபூதியான ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து பேரானந்தம் பெற்று, எம்பெருமானின் திருவடிக ளிலே நித்ய கைங்கர்ய புருஷார்த்தம் பெறுகின்றனர்.

சர்வேச்வரனின் நித்யவிபூதியான ஸ்ரீவைகுண்டத்தை ஜீவாத்மா அடையும்போது அவ் வைகுண்டத்தின் அமைப்பு பேரழகு. ஸ்ரீவைகுண்ட நாதன் ஆதிசேஷன் படுக்கையிலே பிராட்டியருடன் சேவை தரும் அழகு நித்யசூரிகள் எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்து ஆனந்தித்திருக்கும் புருஷார்த் தம் இவற்றை திவ்யதம்பதிகளின் கருணையால் உடையவர் தம்முடைய திருக்கண்களால் தரிசனம் செய்து அவ்வனுபவத்தை அருளிச் செய்கிறார்.

சண்ட மண்டலத்தினூடு சென்று வீடு பெற்றுமேல்
கண்டுவிடிலாத காதலின்பம் நாளும் எய்துவீர்

– திருச்சந்த விருத்தம் –67

பொங்கு நீருலகமாண்டு பொன்னுலகாண்டு
பின்னும்
வெங்கதிர்பரிதி வட்டத்தூடுபோய் விளங்குவாரே

– பெரிய திருமொழி 4–5–10

இயத் பரிமாணம்... ஆஸ்தானமண்டபே... திவ்ய புஷ்போ பவநை:... பாரிஜாத ஆதி கல்பதரு... ஸுக ஸாரிகா மயூர கோகிலாதிபி... ஸ்ரீமந்வைகுண்ட ஸ்வர்யாதி திவ்யலோகம்

எம்பெருமானின் ஸ்ரீவைகுந்த தேசமானது ஒரு மாபெரும் சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யத்தின் விஸ் தீரணத்தின் பரப்பினையும், அளவிளடங்கா செல்வத் தினையும் ஆயிரக்கணக்கான மதில்களோடுகூடிய எழிலான மிகப்பெரும் அரண்மனைகளையும் உடை யதாக ஒளிவீசித் திகழ்கிறது. எம்பெருமானுக்கு நித்யகைங்கர்யங்கள் பலவும் செய்து அங்கே இருக்கின்ற, ஆனந்தித்திருக்கின்ற நித்யசூரிகளால் இந்த வைகுந்த மாநகரம் நிறைந்து காணப்படுகிறது.

சோலைகளில் பாரிஜாதம், சந்தனம், ஹரி சந்தனம், கற்பகம், அகில் கற்பூர மரங்கள் பூத்துக் குலுங்கிய வண்ணம் உள்ளன. சுகமான தென்றல் வீசும்போது அம்மரங்களில் இருந்து விழும் பல நிறமான மலர்களால் அத்தேசம் இயற்கையாகவே அலங்கரிக்கப்பட்டு சுகந்த நறுமணம் அனைத்து திசைகளிலும் பரவி மயக்கத்தினை ஏற்படுத்துகிறது. மலர்களில் உள்ள தேனினைப் பருகியதால் உண்

டான மயக்கத்தில் இனிமையாக ரீங்கரிக்கும் வண்டு களின் ஒலி எங்கும் நிறைந்த வண்ணம் உள்ளது.

அம்மரங்களில் கிளிகள், மயில்கள், குயில்கள் போன்ற பறவைகள் இனிமையாக குரலிசைத்து பறந்து விளையாடிக் கொண்டிருக்கின்றன.

அங்கணெடு மதிள் புடைசூழயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும்சோதி

– பெருமாள் திருமொழி 10–1

கணமருவு மயிலகவு கடிபொழில்சூழ் நெடுமறுகில்
திணமருவு கனமதிள்சூழ் –பெரிய திருமொழி8–3–4
கிளிதாவிய சோலைகள் சூழ் திருப்பேரான்

– திருவாய்மொழி 10–8–4

சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள் பொருது

– நாச்சியார் திருமொழி 9–10

புன்னை செருந்தியொடு புனவேங்கையும்
கோங்கும் நின்று

– பெரியாழ்வார் திருமொழி 4–3–3

ஏனத்துருவாய் இடந்தபிரான் இருங் கற்பகம்சேர்
வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும்
மற்றெல்லாயவர்க்கும்

– திருவிருத்தம் 99

துன்னுமாதவியும் சுரபுனைப் பொழிலும்
சூழ்ந்தெழு செண்பகமலர்வாய்
தென்னவென் றளிகள் முரன்றிசை பாடும்

–பெரிய திருமொழி 9–1–9

வைகுண்ட தரிசனம் தொடரும்...

புத்தக மதிப்புரை



புத்தகத்தின் பெயர்	:	கனவீர தீர உத்தண்ட கோலாகல ஸ்ரீஆஞ்சநேயசுவாமி.
ஆசிரியர்	:	திரு. பூசை. ச. அருண வசந்தன்.
கிடைக்குமிடம்	:	சிவசுந்தரி கலைக்கூடம், ப.எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு, ஆழ்வார் பேட்டை, சென்னை –18.
புத்தக மதிப்பு	:	ரூ. 500/–
அலைபேசி	:	99411 24964

பாரததேசத்தின் மாபெரும் காவியங்களான இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் இடம்பெற்றிருப்பவர் அனுமன். அவர் இராமனின் அடிமையாக அரும்பெரும் தொண்டராக இருக்கிறார் என்றாலும் அஷ்டமாசித்திகள் கைவரப்பெற்ற சித்தாதி சித்தர், எட்டு சித்திகளையும் செய்து காட்டியவர்.

அதிகமுறை விசுவரூபங்களைக் காட்டி அன்பர்களுக்கு அருள்புரிந்தவர். இராமாயணத்தில் மட்டுமின்றி மகாபாரதத்திலும் தனது விசுவரூபத்தைக் காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய அனுமனின் வரலாற்றையும், அதியுன்னத செயல்களின் பெருமைகளை விளக்கும் வகையிலும் கன வீர தீர உத்தண்ட கோலாகல ஸ்ரீஆஞ்சநேயசுவாமி என்னும் நூல் கடந்த அனுமத் ஜெயந்தியன்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் அனுமனின் பல வகையான திருவுருவ அமைப்புகள், அருஞ் செயல்கள், ஆலயங்களில் இடம் பெற்றுள்ளதான சிறப்புகள், கம்பராமாயணத்தில் அவர் வரும் பகுதிகள், இராமருக்கு அவர் செய்த சேவைகள், மயில்ராவணனின் பாதாள இலங்கையில் அவர் ஆற்றிய வீரதீரச் செயல்கள், நாட்டுப்புறச் செய்திகளில் அனுமனின் உன்னத சிறப்புகள் போன்றவை தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

மேலும், அனுமன் சாலீசா, அனுமனின் வாலைப் போற்றும் லோலலாங்கூல தோத்திரம், அனுமன் கவசம், துவாதசநாம பாராயணம், 108 மூலிகை அர்ச்சனை போன்றவையும் இணைத்து வெளியிடப் பட்டுள்ளன.

இத்தொகை ஸ்ரீமணிமாட சொர்ண பைரவர் டிரஸ்ட் அமைக்கவிருக்கும் 64 பைரவர்கள் உடனான ஸ்ரீவிசுவ கயிலாசநாதர் ஆலயத்தின் திருப்பணிக்கு அளிக்கப்பட உள்ளது என்பதால் புத்தகங்களை தாராளமாக வாங்கி தெய்வத் திருப்பணிக்கு உதவிட வேண்டுகிறேன்.

– திரு.கோட்டூர்.செந்தில்வாணன், கோடை



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

சென்ற மாத இதழின் தொடர்ச்சி...

பிருகு முனிவர் கூறியதைக் கேட்டு முனிவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். நாரதர் சொன்ன வார்த்தைகள் நினைவுபடுத்திக் கொண்டார்கள். இனி எந்த ஒரு கருத்து வேறுபாடுக்கும் இடமில்லை. வேள்வி பலன் அனைத்தும் நாராயணனுக்கு என்று அவியை அனைத்தும் அவருக்கு அர்ப்பணித்தார்கள்.

வைகுண்டத்திற்கு பிருகு முனிவர் வந்ததும், கோபத்தால் ஸ்ரீஹரி மார்பில் உதைத்ததும், ஹரி தனக்கு ஒன்றும் நோவு இல்லை என்று சொல்லி பிருகுவுக்கு சத்காரம் செய்ததும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த லட்சுமிதேவி மிகவும் கோபம் கொண்டார்.

தாங்கள் பரபிரம்ம வடிவமானவர். உமது திருமார்பில் நிரந்தரமாக நிவாசம் இருந்து வருகி றேன். ஆனால் இன்று வேறொருவர் வந்து உம் மார்பில் உதைத்தும் தாங்கள் அம்முனிவரை மிகவும் விருப்பமாக அரவணைத்து அன்பு பாராட்டினீர்கள். இது எனக்கு உண்டான அவமானம். இந்த அவமானத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. நான் உம்மை விட்டுப் பிரிந்து சென்று உம்மை நினைத்த வண்ணம் தவம் செய்யப் போகிறேன் என்றாள். ஸ்ரீ ஹரி லட்சுமியைச் சமாதானப்படுத்த முயன்றார். ஸ்ரீ அந்த முனிவர் உதைத்ததனால் நல்லவையே நடக்கப் போகிறது என்று சொல்ல, அதற்கு லட்சுமி நன்றாக கூறினீர்கள். நீங்கள் ஆத்மாவுக்கு ஆத்மா. இந்த உலகம் உண்டாவதற்குக் காரணமானவர். அப்படிப் பட்ட உங்களைப் போற்றி வணங்காமல் ஆவேசத் தோடு வந்து காலால் உதைத்தார். அப்படிப்பட்ட தகாத காரியம் செய்தும் அவரின் செயல் நீங்கள் ஏற்றுக் கொள்வதும், பொறுத்துக் கொள்வதும் நன்றாக இல்லை. மேலும், தாங்கள் அவரின் செயலை சரி என்றும் கூறுகிறீர்கள் என்றாள்.

லட்சுமி தாயாரின் கோபத்தைப் புரிந்து கொண்ட ஸ்ரீஹரி சிறிது நேரம் மௌனம் காத்தார். "லட்சுமி! ஒருமுறை ஆலோசித்துப் பார். பிரம்மா உன் பிள்ளை. பிருகு பிரம்மாவின் மானசப் புத்திரன். காரண காரியங்கள் அறியாதவன். அது மட்டுமல்ல நான் பரமாத்மா என்ற ஞானம் ஒரு சிறிதும் இல்லாதவன்" என்று கூறவே, அதற்கு உடனே லட்சுமி "முனிபாதம் பட்ட இடத்தில் நான் இருப்பது தகாது. இனி நான் உம்மை விட்டு விலகி தூரத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் அமர்ந்து உம்மை ஆராதித்துக் கொண்டு இருப்பது நீதியாக இருக்கும்' என நினைக்கிறேன். தாங்கள் சம்மதித் தால் உடனே நான் இங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறேன் என்றவுடன், ஸ்ரீஹரி லட்சுமியிடம் "உண்மைதான். விரிஞ்சி என் மகன். பிருகு பேரன். நம் குழந்தைக்கு குழந்தை அல்லவா அவன். பிருகுவை நான் சிறு பிள்ளையாகவே பார்க்கி றேன். வயிற்றில் உள்ள குழந்தை உதைப்பதால் குழந்தை மீது தாய் கோபம் கொள்வதுண்டா? கோடான கோடி உயிர்களை என் வயிற்றில் வைத்து காப்பாற்றும் நான் கோபப்படலாமா? இருந்தாலும்

குறுக்கெழுத்துப்புதிர் 118க்கான விடைகள்

1 ஆ	ந்	2 தி	ரா	வி	ல்	கூ	ர்	3 ம	நா	த	ர்
னி	◆	ரு	4 க	ட	லை	க	டை	ந்	த	ன	ர்
தே	ம்	வ	டி	வ	னி	கி	5 மோ	த	◆	◆	யா
ய்	◆	ர	6 க	ற்	ப	க	◆	ர	◆	◆	தா
பி	◆	ங்	ம்	ர	தா	வ	அ	ம	ர்	7 கூ	மி
றை	கு	க	◆	8 ஜ	சை	ச்	9 உ	லை	◆	◆	சு
து	க்	ம்	◆	ரா	க	யா	வி	த	10 உ	யை	ட்
வா	ளு	11 த	ன்	வ	ந்	தி	ரி	◆	◆	தி	ல
த	க	ர்	12 ஆ	13 த	லை	ப்	ப	கு	தி	கு	கா
சி	ர்	மி	மை	ம்	◆	னு	தே	ம	14 கா	ப	ம
தி	வ	15 அ	ப்	ச	ர	ஸ்	க	ன்	னி	ல்	16 ஸ்ரீ
தி	17 தே	ம்	க	நா	ம்	னு	எ	கி	சு	18 வா	◆

பிருகு சாமானியன் அல்ல. பிரம்மாவின் குமரன். மேலும் பிராமணன். தவச்சீலன். அது மட்டுமல்லாது என் மீது பக்தி உடையவன். என்னால் மிகவும் விரும்பப்படுபவன். அப்படிப்பட்டவனின் சிறு தவறை பெரிதுப்படுத்திப் பார்ப்பது சரியல்ல. அவை அனைத்தையும் மறந்து விடு. அமைதியாகி எப்பொழுதும் போல் இருப்பாயாக" என்று கூறினாலும் லட்சுமி அமைதியாகவில்லை.

எது எப்படி இருந்தாலும் பிருகு என் பார்வையில் பரபுருஷன் தான். பரபுருஷன் பாதம்பட்ட இடத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நான் அந்த இடத்தில் அமர்ந்தால் பதிவிரதை என்பதற்கு பொருளே இல்லை என்று கூறி, பிருகு பிராமணன் என்று ஸ்ரீ ஹரி கூறியதை ஏற்றுக் கொள்ளாமல் பிராமணர்களுக்குச் சாபம் கொடுத்தாள்.

"பிராமணர்கள் தேவர்களுக்குப் பகைவர்களாகிய அரக்கர்களுக்கு நம்பிக்கை உரியவர்களாக ஆகுக! தேவர்களுக்குப் பகைவர்கள் ஆகுக! நித்யம் செய்ய வேண்டிய வினைகளை ஆற்றாமல் நீசர்களுடன் சகவாசம் செய்வார்களாக! ஏழ்மையில் உழல்வாராகுக! தாம் கற்ற வித்தையை விற்று பிழைப்பவர்கள் ஆகுக!" என்று சபித்தாள்.

தாங்கள் எவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும் ஒரு தவறு சரியாகி விடாது. தாங்கள் அவரைத் தண்டிக்காமல் விட்டது மிகவும் தவறு. தங்களை எல்லோரும் ஒரு கோழையைப் பார்ப்பது போல் ஏளனமாகப் பார்க்கிறார்கள். எது எப்படி ஆகிலும் அமைதி என்பது உங்களுக்கும் இல்லை. எனக்கும் இல்லை.

நான் எப்பொழுதும் உங்களை மனதில் தியானித்துக் கொண்டே இருப்பேன். அவ்வளவே தவிர உங்கள் சமாதானத்தை ஏற்றுக் கொண்டு மீண்டும் உங்களுடன் திருமார்பில் வசிப்பவளாய் ஒரு போதும் நான் இருக்க மாட்டேன் என்றாள். எத்தனை விதமாக எடுத்துக் கூறியும் ஹரியிடத்தில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாததைக் கண்டு லட்சுமி கொல்காப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

அங்குள்ளவர்கள் அனைவருக்கும் தொழத்தக்க தெய்வமாகினாள் என்று சூத மகரிஷி கூறியவுடன் சௌனகாதி முனிவர்கள் லட்சுமி தேவி புறப்பட்டுச் சென்ற பிறகு ஸ்வாமி வைகுண்டத்தில் இருந்தாரா? இல்லையா? லட்சுமி இல்லாததால் ஸ்வாமி ஸ்ரீஹரி கவலை கொண்டவராய் எப்படி இருந்தார் என்று வினவினர். அதற்கு சமாதானமாக சூதர் பின்பு நடந்த கதையைச் சொல்வதற்கு முற்பட்டார்.

லட்சுமி தேவி கொல்காப்பூர் புறப்பட்டுச் சென்றவுடன் ஸ்ரீஹரிக்கு விரகதாபம் உண்டானது.

வினைப்பயனை யாராலும் மாற்ற முடியாது. உடல் அளவில் லட்சுமி தேவி ஸ்ரீஹரியை விட்டுப் பிரிந்து சென்றாலும் சந்திரனை விட்டு விலகாத சந்திர ஒளியைப் போல லட்சுமி என்னுள் சௌபாக்கியவதியாக நிலைத்து நிற்கின்றாள்.

பகுதிகளும் பகவானும்

திரு. அ.ஜ.ரங்கராஜன்,
சென்னை, 94451 05470.

பகவானின் படைப்புகளில் பக்ஷிகளும் ஒன்று, பக்ஷிகள் பல விதமான ஒலியை மனதை கவரும் வகையில் எழுப்பியும், உயரத்தில் பறந்து நம்மை பரவசமூட்டும் விதமாக வானில் வட்டமிட்டு நமக்கு மகிழ்ச்சி தருகிறது. அது மட்டுமின்றி பகவானின் அவதாரங்களில் முக்கிய இடம் பிடித்து பரப்பி வருகின்றது. அவ்வாறு ஸ்ரீமத் ராமாயணத்தில் பக்ஷிகளின் பங்கினை தற்போது சிறிது ஆராயலாம்.

ஸ்ரீமத்ராமாயணத்திற்கு மூல காரணமாக உள்ளது ஒரு பறவை தான். கிரௌஞ்ச பறவைகள் ஆண் ஒன்றும் பெண் ஒன்றும் உல்லாசமாக வானில் பறந்து கொண்டிருந்தபோது வேடன் ஒருவன் வேட்டையாடி அதனில் ஒன்றை சுட்டுவிட்டான். இதனால் அந்த பறவைகள் பிரிய நேரிட்டது. பறவைகளின் தனித்த நிலையை எண்ணி கலங்கி வால்மீகி முனிவர் அதனையே ஒரு கருவாக்கி ஸ்ரீ ராமன் சீதா தேவி பிரிவு ஏற்பட்டதை காவியமாக ஸ்ரீமத்ராமாயணத்தை படைத்தார்.

கௌசல்யாவின் பவனத்தில் சுக என்ற கிளியும், சரிகா என்ற மைனாவும் உண்டு. அவை ஸ்ரீராமனுக்கு செல்ல பறவைகள் ஆகும். அதற்கான உணவை பூனையிடமிருந்து பாது காத்து தருவது ஸ்ரீராமனின் அன்றாட செயலாக இருந்தது. அவ்வாறு ஜடாயு என்ற கழுகு, சீதையை இராவணன் பஞ்சவடிலிருந்து இலங்கைக்கு கடத்தி சென்ற போது மீட்க போராடிய விவரம் அனைவரும் அறிந்ததே. ஜடாயுவின் தமயன் சம்பாதி சீதையைக் காண முடியாத சோகத்தில் வானரர்களிடம் தெரிவித்த தாகச் சொல்லப்படுகிறது.

திரிஜடை கனவில் பிங்காலிக என்ற வஞ்சுள பறவை சிம்சுபா மரத்தின் உச்ச கிளையில் கூடு கட்டிக்கொண்டு சுகமான கானம் போன்ற ஒலியை அவ்வப்போது எழுப்பியது. ஒரு நல்ல சகுனமாகவே சீதைக்கு சாதகமானதாக ஸ்ரீ ராமபிரானிடம் விரைவில் சேர்ந்துவிடக்கூடிய நிலையை உணர்த்தியது. திரிஜடை கனவில் நல்ல சகுனங்கள் ஏற்படவே

வஞ்சுள பறவை இனிய கனமாக கூவியதும் அறிவோம்.

தொடர்ந்து காக்கையின் செயல்பாடும் சீதை சொன்ன காகாசுர விருத்தாந்தத்தில் காணலாம். ஆஞ்சநேயர் சீதையை அசோக வனத்தில் கண்ட போது ஸ்ரீ ராமனின் நம்பிக்கையைப் பெற சீதைக்கு உதவியது இந்த காக்கையின் செயலினால்தான். ஜயந்தன் என்ற அரக்கன் காக்கையின் வடிவத்தை பெற்று ஸ்ரீ ராமனும் சீதையும் தனியாக அமர்ந்திருந்த நிகழ்வு உதவியது.

அந்த ராக்ஷஸ காக்கை சீதையைத் துன்புறுத்தியவற்றையும், ஸ்ரீ ராமன் அதனை வதம் செய்யாமல் கண்ணை மட்டும் நீக்கப்பட்டதையும் சொன்னவுடன் சீதையைப் பார்த்ததின் அடையாளம் உறுதி செய்தார். பித்ருக்களுக்கு நாம் காக்கையின் மூலம் பிண்டம் சமர்ப்பிப்பதால் காக்கையை உயிர் சேதம் செய்யாமல் விட்டது எனலாம்.

சம்பாதி மற்றும் ஜடாயுவிற்கு பெரியப்பா முறை கருடன் ஆவார். அனைவரும் யோகிகளோடும் முனிவர்களிடமும் மதிப்பும் மரியாதையும் கொண்ட வர்கள் கருடன் என்ற கழுகு இனம் தனி சிறப்பு. பகவானிடத்தில் பல்வேறு வகையில் உள்ளது. எந்த ஸ்ரீவைஷ்ணவ திருக்கோயில்களிலும் கருடனை மதில் சுவர்களில் காணலாம். துவஜஸ்தம்பம் என்ற கொடிக்கம்பத்தில் பிரம்ம உத்சவத்தில் கொடி ஏற்றம் கருடனின் உருவம் பொறிக்கப்பட்ட கொடி யால் நடைபெறும். கருடன் பிரம்ம லோகத்திற்கு அப்போது சென்று பிரார்த்திக்கிறார் என ஐதீகம். அவ்வாறே கருடனின் தரிசனம் கும்பாபிஷேகத்தின் போது ஆகாயத்தில் வட்டமிடுவதை அனைவரும் அறிந்ததே.

மேலும், கருட வாகனம் அனைத்து விஷ்ணு கோயில்களிலும் பிரத்யேக விசேஷம் கொண்டது ஆகும். அந்த கருடனின் கழுத்தில் நாகத்தையும் காணலாம். அவ்வாறே கருடனுக்கு பகையாக பாம்பு இருந்தாலும் சேஷ வாகனமும் சிறப்பு வாய்ந்தது. அதிலும் நாச்சியார் கோவில் கல் கருடன் ஒவ்வொரு பிராகாரத்திலும் கூடுதலாக ஸ்ரீபாதம் தாங்கிகள் தேவைப்படும் வகையில் தனித்துவம் உள்ளது.

திருவாய்மொழியில் (10.2.3) ''ஊரும் புள் கொடியும் அஃதே'' எனவும், (3.8.1) ''புள்ளூர் கொடி யானே'' எனவும் பகவானுக்கு திருக்கோயிலில் கொடியாகவும் வாகனமாகவும் இருப்பதை குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே பெரியாழ்வார் திருமொழியில், ''பறவை ஏறும் பரமபுருடா'' என்று தெரிவிக்கிறார்.

ஸ்ப்தகிரி மார்ச் 2026 விடைகள்

1. நம்மாழ்வார்.
2. மகாமக தீர்த்தவாரி.
3. ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி.
4. கூரத்தாழ்வான்.
5. குமுதவல்லி நாச்சியார்.
6. குகன்.
7. ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி.
8. இராமநுஜ நூற்றந்தாதி.
9. ருஷ்ய சிருங்கர்.
10. தாள்ளப்பாக்க திருமலம்மா(திம்மக்கர்).
11. எல்லோரையும் கவர்பவன்.
12. திருவரங்கத்து அமுதனார்.
13. இலக்குமணன்.
14. திலகவதி அம்மையார்.
15. மகாமகக் குளம்.



போட்டி எண். 44

சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றிப் பெற்றவர்கள்

1. செல்வி எம். நறுமுகை
   சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.
2. செல்வி எ. அழகம்மை
   ராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.
3. செல்வன் தே. உதயகுமார்
   குன்றத்தூர், சென்னை.



108 திவ்விய தேச வைபவம் – 98

திருஅயோத்தி



– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

சென்ற இதழின் தொடர்ச்சி...

விசேஷம்

திவ்ய சூரி கருடவாகன பண்டிதர்.

ராமம் விலோகய புனஸ் தரலாக்ஷ்ய
யோத்யா தெளரேயகம் தசரதார்ணபூர்ணசந்த்ரம்।
ஆர்யாம் விதேக தனயாம் அபஹாய யஸ்ய
ஸ்த்ரைணாம் மனோபஹஶ்த்ருணம்
கணயாம் பபூவ॥

"உலகு அருள் அன்னை எனும் மா மங்கள சனகி எனும் அணி துறந்து மங்கையர் திரளை ஓர் அணுவாய் அங்கலும் உளங்கொண்டு, அயோத்தியில் நெடுநாள் அளித்த காகுத்தன்" என்று போற்றுகிறார்.

தியானச்லோகம்:

க்யாதாயோத்யா நகர்யாம் ரகுகுல திலகம்
ஸீதயாலங்க்ருதாங்கம்
கௌபேரே புஷ்பகாக்யே சசிதநு தவளே
வ்யோமயானே விசாலே
ஆஸீநம் சோத்தராசா முகமது பரதப் ரார்த்தநா
பாரிஜாதம்
ஸ்தாண்வாதி ப்ராணி மோக்ஷ ப்ரதமதிஸரயூ
தம் சரண்யம் ப்ரபத்யே

– விஷ்ணு ஸ்தலாதர்சம்

பாசுரம்:

வடதிசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தம்
துவரை அயோத்தி
இடமுடை வதரி இடவகை உடைய எம்
புருடோத்தமன் இருக்கை
தடவரை அதிரத் தரணி விண்டு இடியத்
தலைப்பற்றிக் கரைமரம் சாடி
கடலினைக் கலங்கக் கடுத்து இழி கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே.

– பெரியாழ்வார்

ஆர்க்கும் இது நன்று தீது ஆனாலும் நெஞ்சே நீ
பார்க்கும் பல கலையும் பன்னாதே சீர்க்கும்
திரு ஐயோத்திப் புயலைச் சீரிய மெய்ஞ்ஞானத்து
உருவை ஒத்திற் பொருளை ஓர்.

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

நாமாக்கள்:

925. *ஓம் புண்ய:நம:*
பாவங்களை நீக்குபவன்.
ஓம் தாந்தி:நம:
மனத்தை அடக்கும் சக்தியைக்கொடுப்பவள்.

926. *ஓம் துஸ்ஸ்வப்ந நாசன:நம:*
கெட்ட கனவுகள் ஏற்படாமல் தடுப்பவன்.
ஓம் ஸ்துதி: நம:
துதிக்கப்படும் பெருமையை அடியார்களுக்கு அளிப்பவள்.

927. *ஓம் வீரஹாநம:*
கஜேந்திரனுக்குப் பகைவனான மிருத்யுவை விலக்கியவன்.
ஓம் ஸித்தி:நம:
பலன் அளிக்கத் தவறாதவள்.

928. ஓம் ரக்ஷண:நம:

கஜேந்திரனைக் காத்தவன்.

ஓம் விரஜா:நம:

ரஜோ குணம், தமோ குணம் இல்லாதவள்.

929. ஓம் ஸந்த:நம:

பக்தர்களுக்குப் பிரியன்.

ஓம் அத்யுஜ்ஜ்வாலா நம:

மிக அதிகமான பிரகாசத்தை உடையவள்.

930. ஓம் ஜீவந: நம:

கஜேந்திரனைப் பிடித்த முதலைக்கும் மோக்ஷம் அளித்தவன்.

ஓம் அவ்யயா:நம:

அழிவற்றவள்.

931. ஓம் பர்யவஸ்தித:நம:

கஜேந்திரனைச் சுற்றி நின்று காத்தவன்.

ஓம் வாணீ:நம:

சரஸ்வதிக்கு ஆத்மாவாக இருப்பவள்.

932. ஓம் அநந்த ரூப:நம:

எண்ணற்ற ரூபங்களை உடையவன்.

ஓம் கௌரீநம:

பார்வதிக்கு ஆத்மாவாக இருப்பவள்.

ஸ்ரீமதே ஸீதாதேவீ ஸமேதாயஸ்ரீரகுநாதராம.

சக்ரவர்த்தி திருமகன், பர ப்ரம்மணே நம:

குறிப்பு: அண்மையில் அயோத்திமா நகரில் பால ராமருக்கு ஒரு திருக்கோயில் அமைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. லக்னௌ நகரத்திலிருந்து வாரணாசி செல்லும் ரயில் பாதையில் பைசாபாத் ரயில் நிலையத்தில் இருந்து 5 கி.மீ தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திருஅயோத்தி திவ்ய தேச தரிசனம் தொடரும்...

பிரம்மோத்ஸவ நிகழ்ச்சி நிரல்





ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி, ரிஷிகேஷ்



28-05-2026, வியாழன்
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

29-05-2026, வெள்ளி
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

30-05-2026, சனி
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

31-05-2026, ஞாயிறு
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

01-06-2026, திங்கள்
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட சேவை

02-06-2026, செவ்வாய்
பகல் : ஹனுமத் வாகனம்
மாலை வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

03-06-2026, புதன்
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

04-06-2026, வியாழன்
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

05-06-2026, வெள்ளி
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்.



ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, நாராயணவனம்



தெய்வத்தாய் கைகேயி

– பண்டிதமணி கு.அரங்கநாதாச்சாரியர்,
வரிச்சிக்குடி.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" எனப் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி கம்பனுக்கு முதலிடம் தந்துள்ளான் .

சிறந்த இதிகாசமான இராமாயணத்தை ஒரு சில மாற்றங்கள் செய்து நம் பண்பாட்டிற்கு ஏற்ப வான்மீக ரோடு சற்றே வேறுபட்டு இராமாவதாரக் கதையை கவிச்சக்கரவர்த்தி கம்பன் நமக்கு நல்கியுள்ளான்.

நிகழ்ந்த கதையாகிய இராம காவியத்திற்கு முதலில் உயிரோட்டம் தந்தவள் கைகேயி ஆவாள். பொதுவாக கைகேயி கொடியவள் எனப் பேசப்படினும் அவள் ஒரு தெய்வப் பிறவி எனச் சொல்லும்படி விளங் கினாள் என்பதை இக்கட்டுரை மூலம் காணலாகும்.

மகப்பேற்றுக்காகப் புத்திர காமேஷ்டி யாகம் செய்த பின் முப்பெரும் தேவியரும் மக்களைப் பெற்ற னர். பிள்ளையைப் பெற்றாள் என்பதை ஈன்றாள், பயந்தாள், அளித்தாள், தந்தாள் எனவும் சொல்லலாம், ஆயினும் கம்பன் கோசலையும் சுமித்திரையும் மக்கள் பயந்தனர் எனச் சொல்லி *"நல்கினள்மா சறு கேகயன் மாது மைந்தனை"* என்கின்றான்.

கைகேயியை *"மாசறு கேகயன் மாது"* என்றும், "அவள் பரதனை நல்கினாள்" என உரைப்பதில் ஒரு சிறப்பு வெளிப்படுகின்றது. "நல்கினாள்" எனும் சொல் அனைவரும் நலமுடன் வாழ வலிமையும் மிடுக்கும் உடைய பரதனைப் பெற்றாள் எனும் பொருள்படி அமைந்துள்ளது. இக்கருத்தை நாட்டுப் படலத்தில் ஒரு பாடல் மூலம் குறிப்பாக வெளிப்படுத்துகின்றான் கம்பன். *"சேலுண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம், மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை, காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த, பாலுண்டு துயில பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை"* இப்பாட்டில் எருமையின் பால் கன்றிற்குக் கிட்டாமல் அன்ன குஞ்சிற்குக் கிட்டியது என்பதால் இராமனுக்குக் கிடைக்க வேண்டிய அரசு பரதனுக்குச் சேர்கி றது என்னும் உள்ளுறை பொருள் பெறினும் பால் அன்னத்தின் குஞ்சிற்குக் கிட்டியது என்பதால் ஓருண்மை வெளிப்படுகின்றது.

பால் சேர்ந்த இடம் அன்னத்தின் குஞ்சிற்கு. அன்னத்தின் தன்மை நீர் ஒழியப் பாலுண் குருகு. ஆதலால் அல்லவை இன்றி நல்லவை நாடும் பரதனிடம் அரசு அமையப் போகின்றது என்றும், அவன் ஆட்சியில் குற்றமே இன்றி நற்றமே நாளும் நிகழப் போகிறது என்னும் கருத்து உணரக் கிடக்கின்றது.

பரதனைப் பெற்றாலும் இராமனை அன்புடன் வளர்த்தவள் கைகேயி. ஆதலால் அவள் இராமனிடம் பேரன்பு பூண்டு ஒழுகினாள். இராமனும் அவள்பால் பெரிதும் ஈடுபாட்டன்புடன் திகழ்ந்தான். இதனை இராமனின் திருமணக் காட்சியில் உணரலாம். இராமன் திருமணம் முடிந்தபின் தாயாரை வணங்கும் முறையில் முதலில் கைகேயியை வணங்கி விட்டு பின்னரே கோசலை சுமித்திரை

இவர்களை வணங்கினான். இதனைப் பின்வரும் பாட்டால் அறியலாம்.

"கேகயன் மாமகள் கேழ்கினர் பாதம் தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கி ஆய தன் அன்னை அடித்துணை சூடித் தூய சுமித்திரை தாள் தொழலோடும்" அயோத்தியில் வாழும் அனைத்துப் பெருமக்களும் இராமன் முடிசூட மனதார விரும்பினார்கள். ஒரு நாட்டின் புரட்சியோ அல்லது கிளர்ச்சியோ நடைபெறல் பெரும்பாலும் பொறாமை பேராசை காரணமாக வேற்று நாட்டவரால் தூண்டப்பெறும். அது போல் முடிசூடத் தடையாக எம்பெருமான் வேற்று நாட்டவளான மந்தரையை நியமித்தான் போலும்.

இராமனுக்கு முடிசூட்டிட கூனிக்கு விருப்பம் இல்லை. பரதனுக்கு அரசு அமைய வேண்டும் என விரும்பினாள். நாளையே முடி சூட்ட ஏற்ற நாள் என்பதை அறிந்து விரைந்து உறங்குகின்ற கைகேயியை எழுப்பி இடர் வரப்போவதை உணராமல் உறங்குகின்றாயே என அவளிடம் இயம்புகின்றாள் மந்தரை.

கூனியின் கூற்றைக் கேட்ட தெய்வ கற்பினாள் *"கேகயன் மாது பராவரும் புதல்வரைப் பயந்த யாவரும் உரா வரும் துயரை விட்டு உறுதி காண்பரால் விராவரும் புவிக்கெலாம் வேதமே அன இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ"* என்றாள். இராமனைப் பெற்றவளாகக் கையேயி தன்னை நினைத்துக் கொள்வதன் மூலம் அவள்பால் பேரன்பு கொண்டமை இனிது அறியப்படுகின்றது.

மேலும், செய்தி செப்பிய கூனியிடம் *"எனக்கு நல்லையும் அல்லை நீ என் மகன் பரதன் தனக்கு நல்லையும் அல்லை தருமமே நோக்கின் உனக்கு நல்லையும் அல்லை வந்து ஊழ்வினை தூண்ட மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்"* என்பதால் இராமன் பால் அன்பின் மிகுதி இனிதே அறியப்படுகின்றது. மந்தரை சூழ்ச்சியினால் கைகேயி இயல்பால் மனம் மாறவில்லை என்பதைக் கம்பன் பின்வரும் பாடலால் உணர்த்துகின்றான்.

"...இமையோர் மாயையும் அவர் பெற்ற வரம் உண்மையாலும், ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும் அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும் துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான் இரக்கம் இன்மை அன்றோ" இன்று இவ்வுலகங்கள் இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றனவே. ஆனாலும் கைகேயி ஏன் மனம் மாறினாள் என்பதற்கு ஒரு செய்தி என் நினைவிற்கு வருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இராமாயணத் தொடர் சொற்பொழிவு கேட்க நேர்ந்தது. அதுபோது சொற்பொழிவாளர் ஒரு செய்தியைச் செப்பினார். கைகேயி காலக்கணக்கில் சோதிடம் கைதேர்ந்தவள் என்றும், அவள் முடி சூடும் நேரத்தைக் கணித்துப் பார்த்து அந்த வேளையில் யார் அரசராக உள்ளாரோ அவர் விரைந்து இறந்து படுவர் என அறிந்து அது காரணமாகத் தன் அன்பு இராமன் முடி சூடிக் கொள்வதைத் தவிர்க்கவே இரு வரம் கேட்டாள் என அவர் விளம்பினார். அப்படியும் இருக்கலாம் என்றே தோன்றுகிறது.

தயரதனிடம் வரம் கேட்ட பொழுது *"ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என். சேய் அரசாள்வது சீதை கேள்வன் ஒன்றால், போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்"* எனும் கம்பன் கூற்றில் கைகேயி இராமன் வனம் ஆள்வது எண்ணாமல் "சீதை கேள்வன்" எனக் காண்கிறோம். இதன் மூலம் இராமனைக் காட்டிற்கு அனுப்ப முழு மனதுடன் இசைய வில்லை என அறியலாம்.

இனிக் கேகயன் மகள் இராமனிடம் கூறிய செய்தியைக் காண்போம்.

ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவ மேற்கொண்டு
பூழி வெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
ஏழிரண்டு ஆண்டில் வா என்று இயம்பினன் அரசன் என்றாள்

"இயம்பினன் அரசன்" என்றதால் கைகேயி தனக்கு முழுமையான எண்ணமில்லை எனவும் எண்ணத் தோன்றுகிறது. மேலும் "ஏழிரண்டு ஆண்டில் வா" என்பதற்கு 14 ஆண்டுகள் எனப் பொருளாகினும் வேறொரு பொருளும் பொதிந்து இருப்பதாக ஓர் உரையாசிரியர் உணர்த்துகின்றார். பதினான்கு என்னாமல் ஏழிரண்டு என்றமையால்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பக்தர்களின் கவனத்திற்கு...

திருமலைக்குச் செல்லும் மலைவழிப்பாதையில் வாகனத்திலோ, நடந்தோ செல்லும் பக்தர்கள் தேவை அற்ற குப்பைகளை அதற்கான குப்பைத் தொட்டிகளில் மட்டுமே போடுங்கள். கண்ட இடங்களில் தூக்கி எறியாதீர்கள்

காடு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. எனவே காட்டினை பாதுகாத்து அடுத்தத் தலைமுறையினருக்கும் நாம் பாதுகாத்து அளித்திட வேண்டும்.

பெயர் *"ஏழிரண்டு ஆண்டு இல் வா"* எனப் பிரித்துப் பொருள் கூறுகிறார்.

"இரண்டு ஏழு பெற்று வருக" எனக் கொண்டு அதற்குள் முதல் ஏழாக ஆறு தம்பியரை பெற்று விளங்குக என்னும்படி அயோத்தியர் தம்பி மூவரும், வேட்டுவக் குகனும், குன்று சூழ்வான் மகன் சுக்ரீவனும், நல்லரக்கன் வீடணனும் ஆகிய ஏழு பேருடன் சமரச சகோதரத்துவ அன்பிற்குச் சான்றாக இராமன் எழுவராய் திகழக் கூறியதாக அமைகிறது.

அடுத்த ஏழு பற்றி கூறியவை எவை என்பதைக் காண்போம். ஒன்று மகன் கானகம் சென்றதால் வானகம் சென்ற தசரதன் இராமன் மீது கொண்ட பேரன்பு வெளிப்படல் *"ஆயிரம் ராமன் நின் கேழ் ஆவரோ"* என குகனால் பாராட்டப் பெற்ற பரதனின் மாண்பு, அனுமனின் ஒப்பற்ற வீரம், அரிய செயல்கள், சுக்ரீவனின் நட்பு, சீதையின் கற்பின் மேன்மை, இளையபெருமாள் இலக்குவனின் பக்தி தொண்டு, இராமனின் இணையற்ற வீர பராக்கிரம மாண்பு இவை எல்லாம் இராமன் கானகம் ஏகினால்தானே வெளிப்படும். இங்ஙனம் இராமனின் சீர்மைக்குக் காரணமாய் இருந்தவள் கைகேயி தானே. கைகேயியின் ஆணைக்கு பதில் உரைக்கும் வகையில் பின்வரும் பாடல் காண்கிறது.

''மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ? என்பின்னவன் பெற்ற செல்வம் அடியேனேன் பெற்றதன்றோ! என் இனி உறுதி அப்பால்? இப்பணி தலை மேற்கொண்டேன் மின்னொளிர் காணம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்''

இப்பாடலால் தாய் கைகேயி சொல்லைத் தட்டாமல் கேட்பவன் தான் என்றும், அவள் விருப்பம் அறிந்து பரதனை அரசாள வேண்டும் எனும் எண்ணத் தால் போய் வருகிறேன் எனாமல் போகின்றேன் என இராமன் கூறுவதில் இருந்து அவன் பரதனிடம் கொண்ட பேரன்பு நன்கு வெளிப்படுகிறது. இராமன் கானகம் செல்ல இருக்கின்றான் என்பதை அறிந்த வசிஷ்டரும் கைகேயியைக் குறை கூறாது சூழ் வினை நான்முகத்து ஒருவன் சூழினும் ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற்பாலதோ என்னால் கைகேயியின் உளம்தனை என அறிகிறோம்.

கேகயநாடு சென்று திரும்பிய பரதன் செய்தியறிந்து சோகித்து மனம் தளர்ந்து அரசு அண்ணன் இராமனுக்கே உரியது என உணர்ந்து அவனை அழைத்து வரத் தாயரும், அருந்தவத் தவரும், தந்தையின் ஆய மந்திரியும், அளவில் சுற்ற மும் சூழ தூய அந்தணர்களும் தொடர்ந்து சூழ் வரக் கானகம் நோக்கி செலவுற்றான். தாயார் மூவரும் பரதனுடன் சென்றனர். கைகேயி ஏன் சென்றாள்.

இராமன் குறித்த வேளையில் முடி சூட்டிக் கொள்ளவில்லை. அதனால் அவனுக்கு மரணம் இல்லை. அவன் திரும்பி வந்தாலும் பரவாயில்லை என நினைத்துச் சென்றாள் போலும். குகன் பரதனிடம் கைகேயியைப்பற்றி யார் இவள் எனக் கேட்டபோது "அவள் இடரில்லா முகத்தாள்" என்கிறான்.இராமன் இறப்புத் தவிர்க்கப்பட்டதால் "இடர் நீங்கினாள்" என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இராமன் சிறிய தாயாரைப் பெரிதும் மதித்தான் என்பதைக் காட்டிலும் அவரைத் தெய்வமாகவே எண்ணினான் என்பதை கீழ் வரும் பாடலால் அறியலாம்.

போர் முடிந்து இராமனை அனைவரும் போற் றும் நிலையில் சொர்க்கத்தில் இருந்து தசரதனும் வருகை தந்து மகனைத் தழுவி வழக்கம் போல் வரம் கேள் என்கிறான். வேண்டுதல் வேண்டாமை இலானாகிய இராமனும், இராமருக்கு வரம் ஏதும் தேவையின்று ஆயினும் தந்தை சொல் கேட்டல் எனும் அறத்துணிபால் வரம் வேண்டுகின்றான். ஆயினும் உனக்கு அமைந்தது ஒன்று உரை என அழகன் தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம் தருகெனத் தாழ்ந்தான் என்னும் கவிக் கம்பன் சொல்லோவி யத்தால் கைகேயி தெய்வக் கைகேயி எனச் சொல்லலாம் அன்றோ!



அனுமன் சாலிசா

அனுமனைத் துதிப்பதால் நல்லறிவு, நற்செயல், மிகுந்த உடல் வலிமை, தைரியம், அச்சமின்மை. நோயற்ற நிலை, பேச்சாற்றல் ஆகியவை கிடைக்கின்றன. இந்த மாபெரும் நன்மை மக்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்ற நோக்கில் துளசிதாசர் இந்த அனுமன் சாலிசாவை அருளிச் செய்தார். இதனைத் தவறாமல் பாராயணம் செய்து வந்தால் துன்பங்களில் இருந்து விடுபடலாம். அனுமனின் அருளால் நற்கதியடைய நாள்தோறும் பாராயணம் செய்திடும் வகையில் "ஸப்தகிரி" வாசகர்களுக்காக...

குரு வந்தனம்

ஸ்ரீகுரு சரண சரோஜ ரஜ நிஜ மனு
முகுர சுதாரி ।
வரணௌ ரகுவர விமல யஸ
ஜோதாயகு பலசாரீ ।।

ஸ்ரீகுரு தேவரின் திருவடித் தாமரையின் தூசியால் அடியேனுடைய மனக்கண்ணாடியைத் துடைத்து தூய்மைப்படுத்திக் கொண்டு இராமபிரானுடைய களங்கமில்லா புகழை வர்ணனை செய்வேன். அது அறம், பொருள், இன்பம், வீடுதனையும் நல்கிடும்.

புத்தி ஹீந தனு ஜானிகே சுமிரௌ
பவன குமார ।
பலபுத்திவித்யாதேஹு மோஹி
ஹரஹு கலேஸ விகார் ।।

வாயுபுத்திரா! சிறிய ஞானத்தவனாயினும் உம்மை தியானம் செய்கிறேன். தோஷங்களை, துன்பங்களை, அகற்றி அடியேனுக்கு வலிமை, அறிவு, ஞானம் அருள்க.

சாலிசா

ஜய ஹனுமாந ஜ்ஞான குண ஸாகர ।
ஜய கபீஷ திஹும்லோக உஜாகர।। (1)

பரந்த அறிவும், நற்குணங்களும் நிறைந்த அனுமனே! மூவுலகங்களையும் ஜொலிக்கச் செய்யும் வானரத்தலைவனே! வெற்றி உண்டாகட்டும்.

ராமதூத அதுலித பலதாமா ।
அஞ்ஜனி புத்ர பவந ஸுதநாமா ।। (2)

ஸ்ரீராமரின் அன்புக்குப் பாத்திரமானவனே! ஈடு இணையற்ற வலிமைக்கு உறைவிடமானவனே! அஞ்சனாதேவியின் மகனே! வாயு புத்திரனே!



மஹாவீர விக்ரம பஜரங்கீ ।
குமதிநிவார சுமதி கே ஸங்கீ ।। (3)

சிறந்த வீரனே! பராக்ரமம் படைத்தவனே! வஜ்ரம் போன்ற அங்கங்களை உடையவனே! கெட்ட எண்ணங்களைப் போக்கி நல்ல மனம் படைத்தவர்களுக்கு சத்சங்கத்தை கொடுப்பவனே!



கஞ்சன வரண வீராஜ சுவேஸா ।
காநந குண்டல குஞ்சித கேசா ।। (4)

பொன் நிறத்தில் அழகான உடையில் பிரகாசிப்பவனே! காதுகளில் குண்டலங்களுடன் விளங்குபவனே! உருண்ட கேசத்தை உடையவனே!



ஹாத வஜ்ர ஔத்வஜா விராஜை ।
காந்தே மூஞ்ஜ ஜநேவு ஸாஜை ।। (5)



தங்கள் உள்ளங்கையில் வஜ்ரம் போன்ற கதாயுதமும், வெற்றிக் கொடியின் ரேகைகளும் பிரகாசிக் கின்ற மூஞ்சி புல்லினாலான பூணூல் அழகுடன் விளங்குகிறது.

சங்கர ஸுவந கேசரீ நந்தன ।
தேஜ ப்ரதாப மஹா ஜக வந்தன ।। (6)

சிவபெருமானின் அம்சமே! கேசரி மைந்தனே! சிறந்த தோற்றப் பொலிவினாலும், வீரத்தினாலும் உலகத்தவரால் வணங்கப் பெறுபவனே!



வித்யாவான குணீ அதி சாதுர ।
ராமகாஜ கரிவேகோ ஆதுர ।। (7)

கல்வியில் சிறந்தவனே! கூர்மையான புத்தி உடையவனே! இராமபிரானுக்குக் கைங்கரியம் செய்ய அவர் அருகில் ஆர்வத்து டன் இருப்பவனே!



ப்ரபு சரித்ர ஸுனிவேகோ ரஸியா ।
ராம லகந சீதா மந பஸியா ।। (8)

எம்பெருமான் கதையைக் கேட் பதில் பரம ரசிகனே! இராமபிரான், லட்சுமணன், சீதா தேவியை உள் ளத்தில் வைத்திருப்பவனே!



ஸூக்ஷ்ம ரூபதரி சியஹி திகாவா ।
விகட ரூப தரி லங்க ஜலாவா ।। (9)

சிறிய உருவத்தால் சீதா பிராட்டிக்குக் காட்சி கொடுத்து, மிகப் பெரிய உருவத்தால் இலங்கையை எரித்தவனே.



பீம ரூபதரி அஸுர சம்ஹாரே ।
ராம சந்த்ரகே காஜ சம்வாரே ।। (10)

பயங்கரமான வடிவம் கொண்டு அசுரர்களை அழித்து, இராமபிரா னுடைய பணிகளைப் பாங்காகச் செய்து முடித்தவனே.

லாய ஸஞ்ஜீவந லகந ஜியாயே ।
ஸ்ரீரகுவீர ஹரஷி உரலாயே ।। (11)

சஞ்சீவி மலையைக் கொணர்ந்து லட்சுமணனை உயிர் பிழைக்கச் செய்தவனே! ரகு குல வீரனான இராமன் தன் திருமார்பு டன் தழுவிக் கொண்டாரே.

ரகுபதி கீன்ஹீ பஹுத படாயீ ।
கஹா பரத ஸம துமப்ரிய பாயீ ।। (12)

இராமபிரான் தன் அன்பு பரதனுக்கு நிகரான சகோதரன் என்று உம் பெருமையை மிகவும் கொண்டாடினாறன்றோ!

ஸஹஸ்ர வதந தும்ஹாரோ யச
காவை ।
அஸகஹி ஸ்ரீபதி கண்ட லகாவை।।
(13)

ஆயிரம் நாவுடைய ஆதி சேஷன் உம் பெருமையைப் பாடி முடிக்க முடியுமா எனக்கூறி, ஸ்ரீய: பதியான ஸ்ரீராமபிரான் உம்மை அணைத்துக் கொண்டாரே!

சநகாதிக ப்ரஹ்மாதி முனீஸா ।
நாரத ஸாரத ஸஹித அஹீஸா ।। (14)

பிரம்மா தொடக்கமான சனகாதி முனிவர்களும், தேவரிஷி நாரதர், ஆதிசேஷன், சரஸ்வதி தேவியினா லும் உமது பெருமையைப் பேசி தலைக்கட்ட முடியாது.

யம குபேர திகபால ஜ ஹாதே ।
கவி கோவித கஹிசகை கஹாம்தே।।
(15)

எமன், குபேரன், அஷ்டதிக் பாலகர்கள், கவிஞர்கள், அறிஞர் கள் முதலியவர்களாலும் உம்மு டைய பெருமைகளைச் சொல்லி முடிக்க முடியாது.

தும உபகார சுக்ரீவ ஹிம் கீன்ஹா ।
ராம மிலாய ராஜபத தீன்ஹா ।। (16)

நீர் சுக்ரீவரை இராமருடன் சேர்த்து, அரச பதவியையும் அளித்து மகோபகாரம் செய்தீர்.

தும்ஹரோ மந்த்ர விபீஷண மானா ।
லங்கேச்வர பய ஸப ஜகஜ்ஞானா ।। (17)

உங்களுடைய அறிவுரையை விபீஷணர் மதித்ததால் இலங்கை வேந்தனாக ஆனார். இது எல்லா உலகமும் அறியும்.

யுக ஸகஸ்ர யோஜந பர பானூ ।
லீல்யோ தாஹி மதுர பல ஜானூ।। (18)

இரண்டாயிரம் யோஜனை தூரத்தில் உள்ள சூரியனை இனிய கனி என்று கருதி விளையாட்டாக விழுங்கச் சென்றாய்.

ப்ரபு முத்ரிகா மேலி முக மாஹீ ।
ஜலதி லாம்கி கயே அசரஜ நாஹீ।। (19)

இராமச்சந்திரப் பிரபுவின் முத்திரை பதித்த கணையாழி மோதிரத்தை வாயில் அடக்கிக் கொண்டு கடலைக் கடந்து சென் றாய். உமது திறமையில் ஆச்ச ரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

துர்கம காஜ ஜகதகே ஜேதே ।
சுகம அநுக்ரஹ தும்ஹரே தேதே ।।(20)

உலகில் செயற்கரிய செயல் கள் எத்தனை உண்டோ அவை அனைத்தும் உம்முடைய திருவரு ளால் எளிமையாய் முடிந்துவிடும்.

ராம துஆரே தும ரகவாரே ।
ஹோத ந ஆஜ்ஞா பிநு பைடாரே ।।(21)

தாங்கள் இராமபிரானின் அரண் மனை வாயிலிலுள்ள திறமை மிக்க மெய்க்காவலர். உங்கள் அனுமதி இன்றி எவரும் அவரை அணுக முடியாது.

ஸப சுக லஹை தும்ஹாரீ சரணா ।
தும ரக்ஷக காஹூகோ டரநா ।। (22)

தங்களை சரணமாகப் பற்றி னால் அனைத்து இன்பங்களும் கிட்டிடும். மேலும், தங்களின் பாது காப்பு இருக்க எவருக்கும் பயப் படத் தேவையில்லை.

ஆபந தேஜ சம்ஹாரோ ஆபை ।
தீநோ லோக ஹாம்க தே காம்பை ।।(23)

தங்கள் ஆற்றலை கட்டுப் படுத்துவதற்கு தங்களால் மட் டுமே முடியும். மூன்று உலகங்களும் தங்களின் ஆரவாரம் கேட்டாலே நடுங்கிவிடும்.

பூத பிசாச நிகட நஹி ஆவை ।
மஹாவீர ஜபநாம ஸுநாவை ।। (24)

மாவீரனாகிய தங்களுடைய நாமம் துதிக்கப்படுவது கேட்ட மாத்திரத்தில் பூதங்களும், பிசாசு களும் அருகில் அண்டுவதில்லை.

நாஸை ரோக ஹரை சப பீரா ।
ஜபத நிரந்தர ஹநுமத வீரா ।। (25)

உமது திருநாமத்தை இடை விடாது துதித்து வந்தால் எல்லா வேதனைகளும் விலகிடும். எல்லா நோய்களும் நீங்கிடும்.

சங்கட ஸே ஹநுமாந சுடாவை ।
மனக்ரம வசன த்யான ஜோலாவை ।।
(26)

யாரொருவர் மனத்தாலும், காயத்தாலும் (உடம்பு), வாக்கா லும் அனுமனை தியானம் செய்கி றார் களோ அவர்கள் துன்பங்களில் இருந்து விடுபடுவார்கள்.

சப பர ராம தபஸ்வீ ராஜா ।
திந கே காஜ சகல தும ஸாஜா।। (27)

எல்லோருக்கும் மேலான இராம பிரான் தவம் செய்யும் முனிவர்க ளுக்கு எல்லா காரியங்களையும் செய்து கொடுக்கிறார். ஆனால், அவருடைய காரியங்கள் அனைத் தையும் நீரே செய்து தருகின்றீர்.

ஔர மநோரத ஜோ கோயிலாவை ।
ஸோயி அமித ஜீவந பல பாவை।। (28)

யார் ஒருவன் தன்னுடைய விருப்பங்களை முன் வைக்கி றானோ அவன் விருப்பத்தை விட

















அதிகமான பயன்களை வாழ்நாள் முழுதும் பெறுவான்.

சாரோ யுக பரதாப தும்ஹாரா ।
ஹை பரசித்த ஜகத உஜியாரா ।। (29)

நான்கு யுகங்களிலும் உம்முடைய திருநாமங்கள் பிரசித்தி பெற்று உலகம் முழுவதும் பிரகாசிக்கின்றன.

சாது சந்தகே தும ரகவாரே ।
அசுர நிகந்தந ராம துலாரே ।। (30)

மகான்களையும் சாதுக்களையும் காத்து, அசுரர்களை அழித்து இராமபிரானின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்கின்றீர்.

அஷ்ட சித்தி நவநிதி கே தாதா ।
அசவர தீன ஜானகீ மாதா ।। (31)

அஷ்டமா சித்திகளையும், ஒன்பது வித செல்வங்களையும் அடியார்களுக்கு அளிக்கின்றீர். இவ்வரம் சீதா பிராட்டியால் அளிக்கப்பட்டது அல்லவா!

ராம ரசாயந தும்ஹாரே பாசா ।
சதாரஹௌள ரகுபதிகே தாஸா ।। (32)

இராம தாசன் எனும் எண்ணம் எப்பொழுதும் இருந்து வருவதால் இறந்தாரையும் உயிர்ப்பிக்கும் திவ்ய ஔஷதமான ராம ரசாயனம் உம்முடைய கைவசப்பட்டுள்ளது.

தும்ஹாரே பஜன ராம கோ பாவை ।
ஜன்ம ஜன்மகே து:க பிசராவை ।। (33)

தன்னை பக்தியுடன் வழிபட்டு வந்தால் பிறவி தோறும் தொடர்ந்து வரும் துன்பங்களில் இருந்து விடுபட்டு இராமபிரானை அடைவான் என்பது திண்ணம்.

அந்தகால ரகுபதி புர ஜாயீ ।
ஜஹோ ஜன்ம ஹரிபக்தக ஹாயீ ।।(34)

அனுமனின் பக்தர்கள் இறுதியாக இராமரின் உறைவிடம் சென்றடைவர். அந்தப் புனித பூமியில், புனிதப் பிறவியில் ஹரி பக்தன் என்று கொண்டாடப்படுவான்.

ஔர தேவதா சித்த ந தரயீ ।
ஹநுமத சேயி சர்வசுக கரயீ ।। (35)

வேறு தெய்வத்தை உள்ளத்தில் கொள்ளாதீர். அனுமனை வழிபடுங்கள். அனைத்து இன்பங்களும் கிடைத்துவிடும்.

சங்கட ஹடை மிடை சபீரா ।
ஜோ சுமிரை ஹநுமத பலவீரா ।। (36)

மகாவீரனான அனுமனின் நாமத்தைத் துதிப்போரின் துன்பங்கள் தீரும். அனைத்து வேதனைகளும் விலகிவிடும்.

ஜை ஜை ஜை ஹநுமாந கோஸாயீ ।
க்ருபாகரோ குரு தேவ கீ நாயீ ।। (37)

அனுமனே! நீர் வெற்றியுடன் வாழ்க! வாழ்க! தாங்கள் ஆசாரியரைப் போல அருள் புரியுங்கள்.

ஜோ ஸதபார பாடகர கோயீ ।
சூடஹி பந்தி மஹா சுகஹோயீ ।। (38)

இத்துதியை 100 முறை துதிப்போர் சம்சார பந்தத்தில் இருந்து விடுபட்டு உன்னத சுகம் பெறுவர்.

ஜோயஹ படை ஹநுமாந சாலீசா ।
ஹோய சித்தி ஸாகீ கௌரீஸா ।। (39)

அனுமனைப் பற்றிய இந்த 40 பாடல்களைத் துதிப்பவர்களுக்கு சிவ பெருமானின் அருளால் விரும்பியவை யாவும் கிடைக்கும்.

துளஸீ தாஸ சதாஹரி சேரா।
கீஜைநாத ஹ்ருதய மஹடேரா।। (40)

துளசிதாசர் எப்பொழுதும் ஹரியின் தொண்டன். ஜெகந்நாதனே! எப்பொழுதும் என் இதயத்தில் வாசம் செய்யுங்கள்.

பவன தனய ஸங்கட ஹரன மங்கள மூரத் ரூப் ।
ராமலகந சீதா சஹித ஹ்ருதய பஹ சுரபூப் ।।

வாயு புத்திரா! சங்கடங்களைத் தீர்ப்பவரே! மங்கள வடிவானவரே! தேவாதி தேவனே! இராம லக்ஷ்மணர் சீதாதேவியுடன் கூடி என் இதயத்தில் நித்தியவாசம் செய்து அருள்வீர்.

ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய ஸீதாய: பதயே நம:

ஸ்ரீராஜ ராமச்சந்திரருக்கு ஜெய்
ஹனுமன் சாலீசா சம்பூர்ணம்

ஆஞ்சநேயம் மஹாவீரம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மகம்
பாலார்க ஸத்ருசாகாரம் ராமதூதம் நமாம்யஹம்

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

திருமலை அனந்தாழ்வான்



ஸ்ரீ பெரும்பூதூரில் இளையாழ்வாரான ராமாநுஜராக அவதரித்த திருவனந்தாழ்வான், அவ்வவதார உத்தேச பூர்த்திக்காக மைஸூர் ராஜ்யத்திலுள்ள சிறுபூதூரில் விஜய வருடம் 1053இல் சித்திரை மாதம், சித்திரை நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் வெள்ளிக்கிழமை அன்று உத்தம ஸ்ரீவைஷ்ணவரான ஸ்ரீகேசவாசார்யருக்கு திருக்குமாரராய், ராமாநுஜருக்கு ஸம காலத்தில் அவதரித்தவர் அனந்தாழ்வான் ஆவர்.

மலையில் வேங்கடவர்க்கு மாமனார் வாழியே
மணிச்சுடர்கோன் அனந்தனென வந்துதித்தோன் வாழியே
உலகுக்கோர் தஞ்சமென உதித்தருள்வோன் வாழியே
உலகுண்ட மாலடியை உகந்து உய்ந்தோன் வாழியே
இலகு சித்திரைதன்னில் சித்திரையோன் வாழியே
எந்தை எதிராசர் இணையடியோன் வாழியே
அலர்மேல் மங்கை திருவுக்கு அப்பனார் வாழியே
அனந்தாழ்வான் திருவடிகள் அனவரதம் வாழியே

பதவுரை

மலையில் – திருமலையில், வேங்கடவர்க்கு – திருவேங்கடமுடையானுக்கு, மாமனார் – பிராட்டியின் தந்தையான அனந்தாழ்வான், வாழ்க – வாழ வேண்டும். மணிச்சுடர்கோன் – மாணிக்க மணியின் ஒளி பொருந்திய அரசனான ஆதிசேஷன், அனந்தன் என – அனந்த ஆழ்வான் என்று சிறப்பாகக் கூறும்படி, வந்து உதித்தான் – வந்து அவதரித்தவர். உலகுக்கு – இந்த உலகுக்கு, ஓர் – ஒப்பற்றதான, தஞ்சமென – அடைக்கலம் என்று சிறப்புற்று, உதித்து அருள்வோன் – தோன்றி அருள் புரிபவரான அனந்தாழ்வான். உலகுண்டமால் – பிரளய காலத்தில் உலகை உண்ட வாயையுடைய ஸர்வேஸ்வரனான திருவேங்கடவன், அடியை – திருவடிகளை, உகந்து – மகிழ்ச்சியுடன், உய்ந்தோன் –

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972



திருமாலைப் பற்றிய
அறிவு, அன்பு முதலிய வைணவச் செல்வம்
உடையவரும், வேதம் கூறும் வழியில் முடகளைக்களைந்து
எறிவதில் முக்கிய விரதம் பூண்டவரும், திருவேங்கடமுடையான்
உடைய கருணை வெள்ளத்தில் திளைக்கும் நீர்மனிதரும்,
ஸ்ரீராமானுஜருடைய பாத கமலத்தில் பட்டாபிஷேகம் பெற்றவரும்,
74–இல் ஒரு எம்பெருமானாரதிபதியுமாக யாரொருவர் உள்ளனரோ,
அப்படிப்பட்ட "ஆண்பிள்ளை" என்னும் பட்டப் பெயரும்
கொண்ட அனந்தான்பிள்ளை ஆசார்யர்
எல்லோரினும் உயர்ந்து விளங்குக.

உய்ந்தவர். இலகு – விளங்குகிற, சித்திரை தன்னில் – சித்திரை மாதத்தில், சித்திரையோன் – சித்திரை நக்ஷத்ரத்தில் பிறந்தவரான அனந்தாழ்வான். எந்தை எதிராசர் – எமக்கு அழியாத தந்தையான யதிகளுக்குத் தலைவரான இராமானுசர், இணை அடியோன் – இரண்டு திருவடிகளே தஞ்சம் என இருப்பவரான அனந்தாழ்வான். அலர்மேல் மங்கை – தாமரைப்பூவில் தோன்றியவளான மங்கையான, திருவுக்கு – லக்ஷ்மியான பத்மாவதித் தாயாருக்கு, அப்பனார் – தகப்பனாராக இருக்கும் அனந்த ஆழ்வான், அனந்தாழ்வான் – திருமலை அனந்தாழ்வான், திருவடிகள் – இரு திருவடிகள், அனவரதம் – எப்போதும், வாழியே – பல்லாண்டு வாழ வேண்டும்.

சிறப்புரை

(மலையில் வேங்கடவர்க்கு மாமனார் வாழியே) மலை என்பது திருமாலின் திவ்யதேசங்கள் நூற்று எட்டினுள் ஒன்றும், வடநாட்டுத் திருப்பதிகள் 12ல் முதலானதும், கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்று சிறப்பாகச் சொல்லும் மூன்றனுள் நடுநாயகமாய் விளங்கும் திருமலையாகும். *"இமையோர் வணங்க மலைமேல் தான் நின்று"* (திருவா. 10–4–4) என்ற இடத்தில், மலை – திருமலை என்றது காண்க. பிரம்மாண்ட புராணம் – வேங்கடாசல மான்மியப் பகுதியில் முதல் அத்யாயத்தில் பிருகு நாரத முனிவரிடம் திருமகள் மணவாளன் எந்த மலையில் தனது வைகுந்தத்தையும் விட்டு வந்து திருமகளோடு கூடி இனிதே இருந்து கொண்டு தேவர்கள் அனைவராலும் ஆராதிக்கப்பட்டு வருகிறாரோ, அந்த திருமலை பாதகம் எல்லாவற்றையும் போக்கிப் புண்ணியத்தை ஒன்று பத்தாக்கி வளர்க்கவல்லது என்று அருளியது காண்க. அதனால் தன்னை அடைந்தவர்களுடைய பாபம் அனைத்தையும் போக்குவதனால் வேங்கடம் எனப் பெயர் பெற்றது. அங்கு உறைபவன் திருவேங்கடவன். அவனுக்கு மாமனாராகத் திகழ்பவர் அனந்தாழ்வானாவர்.

அது எங்ஙனே எனில், ஒரு சமயம், அனந்தாழ்வான் அமைத்த தோட்டத்தில் வெகு நாட்களாகத் தம் விருப்பப்படி உலாவித் திரியும் அரச தம்பதி வேஷம் பூண்ட ஸ்ரீபத்மாவதியையும் ஸ்ரீநிவாஸ பகவானையும் அனந்தாழ்வான் ஒரு இரவில் புதரில் மறைந்திருந்து பிடித்துக்கொண்டார். அவர்களை ஒரு கொடி கொண்டு மரத்தில் கட்டுவதற்காக இழுக்க, ஸ்ரீநிவாஸன் அனந்தாழ்வான் கையை விடுவித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். பத்மாவதியோ ஓடமுடியாமல் அப்பா! அப்பா! உமக்கு நான் பெண்ணாக இருப்பேன். தவறு ஏதும் செய்யாத பெண் பிள்ளையாகிய என்னை விட்டுவிடும் என்று பிறர் இரங்கும் வகையில் பேசினாள். அவளை ஓர் செண்பக மரத்தில் கொடியால் கட்டி, பயமுறுத்தி, அவள் கதையைக் கேட்டுக்கொண்டு பக்கத்திலேயே இரவு முழுவதும் காவலாக இருந்தார்.

அங்கு காலையில் கோயிலுக்கு வந்த அர்ச்சக பரிசாரகர்கள் பெருமாள் திருமார்பில் கண்டிகையில் இருக்கும் பத்மாவதியைக் காணவில்லை என்று அறிந்த உடனே எம்பெருமான் ஒருவனை ஆவேசித்துச் செய்தியை அறிவிக்க, அவனது ஆணையின் படி பத்மாவதியையும் அனந்தாழ்வானையும் அழைத்துச் செல்வதற்காகத் தோட்டத்துக்கு வந்தான். அவர்கள் மூலமாக செய்தியை அறிந்த அனந்தாழ்வான் இது பெருங்குற்றம்

என்று நினைத்து, பத்மாவதி தேவியைச் செண்பக மரத்தில் கட்டிய கட்டிலிருந்து விடுவித்தார். தாம் செய்த தவறினைப் பொறுக்குமாறு அவனை வேண்டி, தமது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, தான் முன்பு கூறிய வார்த்தையை மெய்ப்பிக்க விரும்பி மணம் செய்து கொள்ளத்தக்க கன்னிகையின் நிலையை அடைந்து தமக்குப் பெண்ணாக ஆகிய பத்மாவதியை அக்குளிலும் கையில் பூக்குடலையையும் எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றார். ஸ்ரீநிவாஸனை வணங்கி தாம் செய்த தவறுக்காகப் பொறை வேண்டினார். பின்னர், அனந்தாழ்வானே! உம்முடைய பெண்ணான இவளை எனக்குத்தாரும் என்று வேண்ட, அனந்தாழ்வானும் ஸ்ரீநிவாஸனுக்குப் பத்மாவதியை ஸமர்ப்பித்தார். பின்பு ஸ்ரீநிவாஸன், ஓர் மாலையைத் தன் கழுத்திலிருந்து கழற்றி அவர் கழுத்தில் கந்யா சுல்கம் என்று (கன்னியைப் பெற்றுக் கொண்டதற்கு விலை என்று) அணிவித்து கௌரவித்தான். அப்பிராட்டி அர்ச்சக பரிசாரகர் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று கிளம்பி முன்புபோலவே பெருமாள் திருமார்பில் கண்டியிலுள்ள பொன்மயமான பத்மாவதி உருவமுடையவளாக மாறி நின்றாள்.

அதனை எல்லோருடனும் வியப்போடு கண்ட அனந்தாழ்வான் அது முதற்கொண்டு அலர்மேல் மங்கையின் தந்தை என்றும், திருவேங்கடமுடையானுக்கு மாமனார் என்றும் எங்கும் அனைவராலும் அழைக்கப்படலானார் என்ற வரலாறு திருவேங்கடமலை வரலாற்று மாலை மூலம் அறியலாம். அத்தகைய அனந்தாழ்வானுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

(மணிச்சுடர்கோன் அனந்தனென வந்துதித்தோன்) அனந்தன் – பரமபதத்தில் எம்பெருமானுக்கு எல்லாமாக இருந்து அடிமை செய்பவன். கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள், கின்னரர்கள், மஹாநாகங்கள் ஆகியோருடன் கூடிய ஸித்தர்கள் எம்பெருமான் உடைய குணங்களில் எல்லையை அடைவதில்லை. ஆகையால் இவன் அனந்தன் என்று சொல்லப்படுகிறான் என்று ஸ்ரீவிஷ்ணு புராணம் கூறும். மணிச்சுடர் என்றதனாலே *"இருளிரியச் சுடர் மணிகள்"* என்று குலசேகராழ்வார் அருளியபடியே இருள் சிதறிப்போம்படி ஒளியை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...

- திருமலைக்கு சொந்த வாகனத்தில் வரும் பக்தர்கள் கூடுமான வரை ஓட்டுனர்களுக்குப் போதிய ஓய்வினை அளித்திடுங்கள். வாகன ஓட்டுனர்களின் பாதுகாப்பே நமது பாதுபாப்பாகும்.
- மலைவழிப்பாதையில் வாகனங்களை ஓட்டும் போது கவனமாகச் செயல்படவும். பிற வாகனங்களை முந்திச் செல்லாதீர்கள்.
- அனைவரும் கட்டாயமாக சீட் பெல்டை அணியுங்கள்.
- திருமலைக்கு இருச்சக்கர வாகனத்தில் வருபவர்கள் தலைக்கவசத்தை அணியுங்கள். தலைக்கவசமே உயிர் கவசமாகும்.

உடைய மணிகளை உடைய நெற்றியை உடையவன் திருவனந்த ஆழ்வான் என்பர். நாகராஜன் என்னும் மிக்க ஒளியை உடையவன். எல்லாவற்றையும் வ்யாபித்து நிற்கும் ஸர்வேச்வரனை தனக்குள் அடங்கி நிற்கும்படியான திருமேனியையும் குணங்களையும் உடையன் ஆகையாலே அனந்தன் எனப்படுகிறான் என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

அத்தகைய அனந்தன் இராமாநுசரின் விருப்பத்துக்கு இணங்க, இந்நில உலகில் அனந்தாழ்வானாகச் சிறப்பு பெற்றார் என்பர். அதாவது பகவத் ராமாநுஜராக அவதரித்த ஆதி சேஷி பகவான் எல்லா சாஸ்த்ரப் பொருள்களையும் உபதேசிப்பதிலேயே ஊக்கம் கொண்டவராய், அவற்றை உபதேசம் மூலமாகவே அல்லாமல் அனுட்டான மூலமாகவும் தெரிவித்து உலகோரை உய்விக்க விருப்பம் கொண்டு, இவ்விரண்டு செயல்களையும் ஒரே உருவம் எடுத்துச் செய்ய முடியாது என்று கருதி, ஸ்ரீபதரிகாசிரமத்தில் நரன், நாராயணன் என்ற இரண்டு உருவம் கொண்ட பகவான் போன்று ஆதிசேஷனும் இரண்டு உருவம் கொள்ள ஆசைப்பட்டு, மேல்நாட்டில் சிறுபுத்தூரில் சித்திரை மாத சித்திரை நக்ஷத்ரத்தில் தம்முடைய அம்சமாகவே ஒருவரை அவதரிக்கச்செய்ய, அவரே அனந்தனாக அவதரித்துச் சிறப்புறச்செய்தார் என்று திருவேங்கடமலை வரலாற்று மாலை கூறும். அத்தகைய அனந்தாழ்வானுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

அனந்தாழ்வானின் வாழித்திருநாம உரை தொடரும்...

அலசுவோம்...
அறிவோம்...
ஆதிகாவிய
நாயகர்களை...

அவ்வுலகை விரும்பாத ஸ்ரீஆஞ்சநேயர்



திரு. எஸ். ஸ்ரீதுரை,
காஞ்சீபுரம், 9486139685

கோஷ்பதீ க்ருத வாராசிம் மசகீ க்ருத ராக்ஷஸம் ।
ராமாயண மஹாமாலா ரத்னம் வந்தே அநிலாத்மஜம் ॥

மிகப்பெரிய சமுத்திரத்தினை ஒரு பசுவின் குளம்படி நீரை தாண்டுவதைப் போன்று மிகவும் எளிதாகக் கடந்தவரும், கொசுவை அழிப்பது போன்று ராட்சஸர்களை எல்லாம் அநாயாசமாக அழித்தவரும், ஸ்ரீமத்ராமாயணம் என்னும் பெரியதொரு மாலையில் நடுநாயகமாகப் பதிக்கப்பட்ட வைரம் போன்றவரும், வாயு புத்திரர் ஆகிய ஸ்ரீஆஞ்சநேயரை வணங்குகின்றேன் என்பது மேற்கண்ட சுலோகத்தின் எளிய பொருளாகும்.

பொன்னால் செய்யப்படும் சங்கிலிகள், மாலைகள் போன்ற ஆபரணங்களில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட பதக்கங்கள் நடுநாயகமாக விளங்குகின்றன அல்லவா? அதே போன்று (உத்தர காண்டம் உள்ளிட்ட) ஏழு காண்டங்களைக் கொண்ட ஸ்ரீமத்ராமாயணத்தின் நடுவில் அமைந்துள்ள 4வது காண்டமாகிய கிஷ்கிந்தா காண்டத்தில் அறிமுகமாகும் ஆஞ்சநேய ஸ்வாமி, அறிவு, அடக்கம், வீரம், தைரியம், அபரிமிதமான பலம், எதையும் சாதிக்கும் சாமர்த்தியம் ஆகியவற்றுடன் ஸ்ரீராமபக்தியும் கொண்டவராக விளங்கி அந்த மாபெரும் காவியத்தைத் தாங்கும் ஆதரமாகவே உயர்ந்தார்.

இதன் காரணமாகவே ஆஞ்சநேயரின் பராக்கிரமங்களை விரிவாகப் பேசுகின்ற காண்டம் சுந்தரகாண்டம் என்ற திருப்பெயரைப் பெற்றது. ஸ்ரீமத்ராமாயணத்தை முழுவதுமாகப் பாராயணம் செய்ய இயலாதவர்கள் இந்தச் சுந்தரகாண்டத்தை மட்டுமே பக்தியுடன் பாராயணம் செய்தாலும் பரிபூரணமான இறையருளைப் பெறலாம் என்பதே இதன் சிறப்பாகும். மன உறுதி, புத்திக் கூர்மை, வாக்கு வன்மை, செயல் திறன், இறுதியாகக் காரிய சித்தி இவை யாவையும் சுந்தரகாண்ட பாராயணம் நல்கும். ஸ்ரீமத்ராமாயணம் என்ற பெரும் காவியத்தின் கதாநாயகன் ஸ்ரீராமன் என்றாலும், அக்காவியத்தின் மிக முக்கியமான அங்கமாகிய சுந்தர காண்டத்தின் கதாநாயகனாக ஆஞ்சநேயரே விளங்கினார் என்றால் அது மிகை ஆகாது. சுக்ரீவனின் மந்திரிகளில் ஒருவராக இருந்த ஸ்ரீஆஞ்சநேயர் தம்முடைய உண்மையான பலம் அறியாதவராகவே இருந்திருக்கின்றார். ஸ்ரீசீதா பிராட்டியைத் தேடி கிஷ்கிந்தைப் பிராந்தியத்தில் நுழைந்த ஸ்ரீராம லட்சுமணர்களைத் தரிசித்த பின்பு அவருள் பெரும் மாற்றம் ஒன்று நிகழ்ந்து இருக்கிறது. அதுவரையில் சுக்ரீவனின் மந்திரியாக விளங்கியவர், ஸ்ரீராம பிரானின் பக்தராக மாறினார்.

ஸ்ரீராமநாமமானது அவரின் நாடிநரம்புகளில் எல்லாம் சஞ்சரிக்கத் தொடங்கியது. ஸ்ரீராம பக்தர்களுக்கெல்லாம் ஓர் உதாரண புருஷராகவும், ஸ்ரீராம நாமத்தின் பெருமைகளை விளக்கும் கலங்கரை விளக்கமாகவும் ஆஞ்சநேயர் விளங்கினார் என்றால் அது மிகை ஆகாது.

அப்படிப்பட்ட ஆஞ்சநேயர் எப்படித் தோற்றம் அளிக்கின்றார் என்பதை ஓர் அருமையான வடமொழி சுலோகம் கூறுகின்றது.

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ர தத்ர க்ருத மஸ்தகாஞ்ஜலிம்।
பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்॥

இவ்வுலகில் ஸ்ரீராமநாமம் ஓதப்படும் இடங்களில் எல்லாம் பக்தி சிரத்தையுடன் தம்முடைய திருக்கரங்களைக் கூப்பிக்கொண்டு, தமது திருக்கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியபடி ஆஞ்சநேயர் காட்சி தருகின்றாராம். தமது விருப்பத்திற்குரிய தெய்வத்தின் திருநாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் யார் ஒருவருடைய கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகுகின்றதோ அத்தகையவரின் பக்தியே உன்னதமானது. அப்படிப் பட்ட உன்னதமான பக்திக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர் ஆஞ்சநேயர்.

ஸ்ரீராமபிரான் தம்முடைய அவதாரத்தின் முடிவில் தம்மை அண்டி இருந்தவர்களையெல்லாம் ஸ்ரீவைகுண்டலோகத்துக்கு அழைத்துச் செல்ல விரும்பினார். இதனை ஸ்ரீநம்மாழ்வார்,

கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே

என்ற திருவாய்மொழியில் பாடியருளியுள்ளார்.

ஸ்ரீராமபிரானின் அத்யந்த பக்தராகிய ஆஞ்சநேயரோ, நாராயண நாமம் புழங்குகின்ற அவ்வுலகத்திற்குச் செல்வதை விட, "ஸ்ரீராம" என்னும் திருநாமம் ஓதப்படுகின்ற இப்பூவுலகிலேயே தங்கிவிடுவதென்று முடிவு செய்ய, அதனை ஸ்ரீராமபிரானும் தமது திருவுள்ளமுகந்து அங்கீகரித்தார். இதன் காரணமாகவே, ஸ்ரீமத்ராமாயணம் முழுவதுமாகவோ, சுந்தர காண்டம் மட்டுமோ பாராயணம் செய்யப்படும் இடங்களாயினும் சரி, ஸ்ரீராமநாம அகண்டபாராயணம் நடைபெறும் இடங்களாயினும் சரி அவ்விடத்தில் ஸ்ரீஆஞ்சநேயர் எழுந்தருளுவதற்காக தனியே ஒரு மணைப் பலகையை வைக்கின்ற வழக்கம் நம்முடைய முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆஞ்சநேயர் சூட்சுமரூபமாக அந்த மணைப்பலகையில் எழுந்தருளி இருந்து அப்பாராயணங்களைக் கேட்டு மகிழ்வார் என்பது நம்பிக்கை. பல சமயங்களில் அத்தகைய பாராயணங்கள் நடைபெறும் இடங்களில் தனியாகவோ கூட்டமாகவோ குரங்குகள் வருகை தந்து, பக்தர்களுக்குத் தொந்தரவு செய்யாமல் அமைதியாக அமர்ந்து விட்டுப் பாராயணம் முடிந்த பின்பு பக்தர்களால் வழங்கப்படும் வாழைப்பழம் உள்ளிட்ட பிரசாதங்களை வாங்கிக் கொண்டு திரும்பிச் செல்வது நிகழ்வதைப் பார்க்கின்றோம்.

ஸ்ரீராமநாமம் ஓதப்படுகின்ற இடங்களுக்கு ஸ்ரீஆஞ்சநேயர் வருகை தருவதை இந்நிகழ்வுகள் அமைகின்றன. எனக்கு வைகுண்ட உலகம் வேண்டாம், இவ்வுலக வாசமே போதும் என்று ஆஞ்சநேயர் கூறியதற்கு நம் நாட்டிலுள்ள புராதன மான திவ்ய தேசத் திருக்கோயில்களே சாட்சிகளாக விளங்கு வதையும் நாம் காணலாம். எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இப்பூவுலகில் அர்ச்சாவதார வடிவில் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசத் திருக்கோயில்கள் யாவும் சாட்சாத் வைகுண்ட லோகத்தின் மறுவடிவமாகவே பார்க்கப்படுகின்றன.

பெருமாள், தாயார், நித்ய சூரிகளுக்கும், எம்பெருமானின் சுதர்சன ஆழ்வாருக்கும் அத்திருக்கோயில்களில் தனிச் சன்னிதிகள் அமைந்துள்ளன. கர்ப்பக் கிருஹம் வைகுண்ட லோகத்தில் எம்பெருமான்



எழுந்தருளியிருக்கும் திருமாமணி மண்டபமாக உருவகிக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர ஆழ்வார்களுக்கான சந்நிதிகளும் அத்திருக் கோயில்களில் இடம் பெற்றுள்ளன. மேலும், ஆசாரிய புருஷர்களுக்கான திருச்சந்நிதிகளும் அத்திருக்கோயில்களில் அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

சிரஞ்சீவியாகிய ஆஞ்சநேயரோ திரேதா யுகத்தைச் சேர்ந்தவர். அவருடைய திருச்சந்நிதி திருக்கோயில்களின் வெளியில் அமைந்து இருக்கின்றது. ஆனால், அவருக்குப் பிறகு அவதரித்தவர்களாகிய நம் ஆழ்வார்களுக்கும், ஆசாரிய புருஷர்களுக்கும் திருச்சந்நிதிகள் திவ்யதேசத் திருக்கோயில்களின் உள்ளே அமைந்திருக்கையில் ஸ்ரீஆஞ்சநேயரின் சந்நிதி மட்டும் திருக்கோயிலுக்கு வெளியில் அமைந்து இருப்பதற்கு என்ன காரணம்?

ஆழ்வார்களாயினும் சரி, ஆசார்ய புருஷர்கள் ஆயினும் சரி, அவர்கள் அனைவரும் தத்தம் அவதாரங்களின் முடிவில் வைகுந்த உலகத்தை அலங்கரித்தவர்களாவர். எனவே தான், அவர்களுக்கு உரிய திருச்சந்நிதிகள், சாட்சாத் வைகுண்டலோகத்தின் மறுவடிவமாகவே மதிக்கப்படும் திவ்யதேசத் திருக்கோயில்களின் உட்புறத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீஆஞ்சநேயரோ, அவ்வுலகமாகிய வைகுண்ட லோகத்தினைக் காட்டிலும் அளவற்ற இன்பத்தைத் தருகின்ற ஸ்ரீராமநாமம் ஓதப் படுகின்ற இவ்வுலகமாகிய பூலோகத்தின் வாசமே தமக்குப் போதும் என்று விரும்பித் தீர்மானித்தவர் அல்லவா? எனவேதான், அவருடைய திருச்சந்நிதியானது திவ்ய தேசத் திருக்கோயில்களின் வெளிப்புறத்தில் அமைந்து உள்ளது. அதே சமயம், திருக்கோயில்களின் வெளிப்புறத்தில்தான் ஆஞ்சநேயஸ்வாமியின் திருச்சந்நிதி உள்ளது என்பதனால் இவருடைய பெருமைக்குக் குறைவு ஏதும் இல்லை.

திவ்யதம்பதிகளாகிய ஸ்ரீராமபிரான், ஸ்ரீசீதா தேவி ஆகிய இருவருடைய திருவருளையும் குறைவறப் பெற்றவர் ஸ்ரீஆஞ்சநேயர். ஸ்ரீராமபிரான் தம்முடைய பட்டாபிஷேக வைபவத்தினையொட்டிப் பலருக்கும் பரிசுகளை அளித்தார். ஆனால், தம்முடைய திருவுள்ளத்திற்கு மிகவும் நெருக்கமான ஆஞ்சநேயரை பேரன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டதன் மூலம் பெறற்கரிய தான தம்முடைய திருமேனி ஸ்பரிசத்தையே பரிசளித்தார் என்பது மிகவும் விசேஷமன்றோ!

அதுமட்டுமா! ஸ்ரீசீதா தேவியும் தம்முடைய திருக்கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் கழற்றியதை அவதானித்த ஸ்ரீராமபிரான், ஹே சீதா! இந்த முத்து மாலையை உன் மனதுக்கு மிகவும் உகந்தவருக்குப் பரிசாக அளித்திடுவாய்! என்று கூறினார். ஸ்ரீசீதா தேவியும், தம்முடைய மனம் நெகிழ்ந்தவராகப் புன்னகை ததும்பும் முகத்துடன் அந்த முத்து மாலையை ஸ்ரீஆஞ்சநேயருக்குச் சூட்டி மகிழ்ந்தார். இது பெருமையிலும் பெரிய பெருமை அன்றோ?

பொதுவாக கருடபகவானைப் பெரிய திருவடி என்றும், ஸ்ரீஆஞ்சநேயரைச் சிறிய திருவடி என்றும் அழைப்பது வழக்கத்தில் இருக்கின்றது. ஆனால், சான்றோர்களாகிய ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் ஸ்ரீராமபிரானின் ஆலிங்கனத்தையும், ஸ்ரீசீதாதேவியின் முத்துமாலையையும் பரிசாகப் பெற்ற பெரும் பாக்யசாலியாகிய ஸ்ரீஆஞ்சநேயரை திருவடி என்றே (சிறிய என்ற அடைமொழியைத் தவிர்த்து) அழைக்கின்றனர். திவ்யதம்பதிகளாகிய ஸ்ரீராமபிரான் ஸ்ரீசீதாதேவி இருவரின் பேரருளைப் பெற்றவரும், தாம் பெற்ற அந்தப் பேரருளை நமக்கெல்லாம் பகிர்ந்தளிப் பவருமாகிய ஸ்ரீஆஞ்சநேயரை

அஸாத்ய ஸாதக ஸ்வாமிந் அஸாத்யம் தவ கிம் வத।
ராமதூத க்ருபாஸிந்தோ மத்கார்யம் ஸாதய ப்ரபோ॥

என்று வேண்டி வணங்கி விண்ணப்பம் செய்வதன் மூலம் நமது பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்வ துடன், அவருடைய திருவுள்ளம் உகக்கும் விதமாக ஸ்ரீராமஜபமும் செய்து பேரின்பம் அடைவோமாக!

பக்தர்களின் கவனத்திற்கு...

- **"நீரின்றி அமையாது உலகு" என்பார் வள்ளுவர். எனவே திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர் கள். தண்ணீர் குழாய்களை உபயோகித்த பின்னர் நிறுத்தி விட்டுச் செல்லுங்கள்.**
- **மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவும். தேவையில்லாத நேரங்களில் மின்சாரத்தை நிறுத்தி வையுங்கள்.**

தொடர்ந்து அலசுவோம்...

ஸ்ரீ உ. வே. அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சென்னை.

எச்சிலை உண்டதற்கும் முக்தி!

"ஆஹாரசுத்தௌ ஸத்வசாத்தி: ஸத்வசுத்தௌ த்ருவாஸ்ம்ருதி:" (சாந்தோக். 7.26.2) – உட்கொள்ளும் உணவின் தூய்மையினால் மனம் தூய்மை அடையுமென்பதும், அதனால் நினைவு தூய்மை அடைந்து எம்பெருமான் ஒருவனிடத்திலேயே மனம் ஈடுபடும் என்பதும் வேதவாக்கு. கீதாசார்யனான கண்ணன் எம்பெருமான் பகவத் கீதையிலும் ஸத்வ குணம் நிறைந்துள்ள உணவுகளையே உட்கொள்ள வேண்டும் என்றும், அப்படிப்பட்ட உணவினாலேயே மேலான ஞானம் ஏற்பட்டுத் தன்னிடத்தில் பக்தி வளர்வதற்கு வழிவகுக்கும் என்றும் உபதேசித்தான்.

ஞானம், ஆயுள், வலிமை, ஆரோக்யம், மகிழ்ச்சி ஆகியவற்றை வளர்ப்பதாய், சுவை கொண்டதாய், பலம் தருவதாய், மேலும் உண்பதற்கு இனியவையாயுள்ள உணவு சாத்வீக உணவு என்றும் எம்பெருமான் விளக்கினான். உணவில் சத்வ குணம் எப்படி வளரும் என்பதனை கீதை மூன்றாம் அத்யாயத்தில் விவரித்தான். மனிதர்கள் தேவர்களைக் குறித்து யாகங்களைச் செய்து வணங்க வேண்டுமென்றும், அந்த யாகங்களிலே பயன்பட்டு எஞ்சியுள்ள உணவிலே ஸத்வகுணம் மேலோங்கி இருக்குமென்றும், அந்த உணவே மனிதர்களை எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடச் செய்வது என்றும் உபதேசித்தான்.



"மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவா" (திருவாய்மொழி 8.1.5) எனும் ஆழ்வார் வாக்கின்படி அனைத்து தேவர்களையும்விட மேம்பட்ட தேவனான, முதல்வனான திருமகள்கேள்வன் எம்பெருமானை வழிபட்டு அவனுக்கு நிவேதனமாகப் படைக்கப்பட்ட உணவே மேலான சத்வ குணம் நிரம்பப் பெற்றது. எம்பெருமானை ஆராதிக்காமல் ஒருவன் தனக்காக உணவைச் சமைத்து உண்டால், அவன் திருடன் எனப்பட்டு, ஒரு நன்மையும் கிட்டாமல், பாவத்தையே புசித்தவனாகி, நரகத்தையே அடைகிறான்.

மேலும், கீதை (பதினேழாம் அத்யாயத்தில்) தமோகுணம், ரஜோகுணம் மிகுந்துள்ள உணவுகளைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்று உபதேசித்து, ரஜோகுணம், தமோகுணம் மிகுந்துள்ள உணவுகள் எவையெவை என்பதையும் விளக்கினான். அதன்படி கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரம், எரிச்சல், வெப்பம் முதலியவை அளவற்று மிகுதியாக உள்ள உணவுகள் ரஜோ குணம் மிக்கிருப்பவை. சமைத்த பின் அதிக நேரம் கழிந்து ஆறியது, நற்சுவையற்றது, துர்நாற்றம் வீசுவது, எச்சில்பட்டது, அசுத்தமானது முதலியவை தமோ குணம் மேலிட்டிருக்கும் உணவுகளின் தன்மைகள்.

ஆகவே எச்சில்பட்ட உணவு ஸத்வ குணமற்றதாய், உண்பதற்குத் தகுதியல்லாததாய் இருக்கிறது. ஆனால் பின்வரும் பாடலிலோ ஒரு ஜந்து எச்சிலை வாரி உண்டு பின் முக்தியை அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளை பல தாங்கேல்

புதிய ஆத்திசூடி 15



ஒரு மரத்தை எடுத்துக் கொண்டால், அது தாங்க முடியாத அளவிற்கு அதிகமாகக் கிளைகள் வளர்ந்து விட்டால், வேகமாகக் காற்றடிக்கும் போது கிளைகள் தாமாகவே முறிந்து விழுந்து விடும்.

சமுதாய வழக்கில் "கிளை" என்றால் உற்றார் உறவினர், சுற்றத்தார், குடும்பம் என்பதாகும். அந்தக் காலத்தில் குடும்பத்தில் அதிகமாகக் குழந்தைகள் 6 அல்லது 7 பேர் இருந்தார்கள். "ஒருவர் கோட்டையில் அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்த்தார். அந்தக் காலத்தில் மிகவும் குறைவான சம்பளம்தான். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை அரைரூபாய் சம்பள உயர்வும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் அதிகரித்து பிரமோஷன் ஆகும்" என்று ஒரு கதையில் பாரதி கிண்டலாகக் கூறுவார்.

அளவோடு பெற்று வளமோடு வாழ வேண்டும் என்பதை அன்றே வலியுறுத்தியவர் பாரதி. அத்தோடு "அளவுக்கு அதிகமாக குடும்ப உறவினர்கள் பலரையும் தாமே பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி அனைவரையும் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டு அவர்களை சோம்பேறிகள் ஆக்காதே" என்று எச்சரிக்கிறார் பாரதி. அது சமுதாயத்திற்கு நல்லதன்று என்று கூறுகிறார். யாரும் சும்மா இருக்கக்கூடாது. சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். நம்மால் ஆதரிக்க முடியாத அளவிற்கு உறவினரை சேர்த்துக் கொண்டு வறுமையில் வாடக்கூடாது. வாழும் வரை வளமாக வாழப் பழகுங்கள் குழந்தைகளே!

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

வாய்க்கும் குருகைத் திருவீதி எச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபதமளித்தாய் - அந்த நாயோடிந்தப்
பேய்க்குமிடமளித்தால் பழுதோ! பெருமான் மகுடஞ்
சாய்க்கும் படிக்குக் கவி சொல்லும் ஞானத் தமிழ்க்
கடலே!

திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரியில்) தாமிரபரணி ஆற்றங்கரையில் ஒரு சித்தர் வாழ்ந்து வந்தார். அவர் வசிப்பிடத்தினருகே ஒரு நாயும் வசித்து வந்தது. அந்த நாய் தினந்தோறும் திருக்குருகூர் திருவீதிகளில் சுற்றித்திரிந்து, ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகைகளிலே எறியப் பட்ட எச்சில் இலைகளிலிருந்த உணவை மட்டுமே உட்கொண்டு வாழ்ந்து வந்தது.

ஒரு சமயம் தாமிரபரணியில் பெருத்த வெள்ளம் ஏற்பட, அந்த நாய் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு உயிரை விட்டது. நாயின் உடல் ஆற்றில் இழுத்துச் செல்லப்பட்ட போது பேரொளி பொருந்திய ஒரு விமானம் ஆகாசத்திலிருந்து கீழிறங்கி அதனருகில் சென்றது. நாயின் உடலிலிருந்து சோதிமயமான ஆத்மாவானது பிரிந்து அந்த விமானத்தில் ஏற, விமானம் விண்ணை நோக்கிச் சென்று மறைந்தது. இதைத் தொலைவிலிருந்து நோக்கிக் கொண்டிருந்த சித்தர் மிகவும் வியந்து, நெகிழ்ந்து, உணர்ச்சி வசப்பட்டு மேலே குறிப்பிட்ட பாடலைப் பாடினார்.

திருக்குருகூர் திருவீதிகளிலிருந்த எச்சில் உணவை உண்ட நாயிடமும் நம்மாழ்வார் மிகுந்த கருணை கொண்டு பரமபதம் அளித்ததை எண்ணி பூரிப்படைந்த சித்தர், பேய்போன்று உழலும் தம்மிடமும் இரக்கம் கொண்டு பரமபதம் அளித்தால் அது பிழையாகாதன்றோ என்று இப்பாடலினால் ஆழ்வாரையே வினவுகிறார். சித்தர் தம்மை பேயாகக் கூறியமை அவரின் பேய்த்தன்மையைக் குறிக்கிறது. அதாவது எம்பெருமானிடமே மிக்க ஊற்றம்கொண்டு, அவனை அனுபவிப்பதிலேயே நிலைநின்று, மற்றனைத்தையும் காற்கடை கொண்டு இருப்பவர் என்றபடி. இதே போன்ற கருத்தைக் குலசேகராழ்வார் *"யானுமோர் பேயனே"* (பெருமாள் திருமொழி 3.8) என்று அருளிச்செய்து உள்ளார்.

நாய் எனும் விலங்கு சாஸ்த்ர வரம்புக்கு உட் படாதது மட்டுமன்றி முக்திக்கு வழியாக சாஸ்த்ரத் தில் கூறப்பட்ட தர்மங்களைக் கடைபிடிப்பதற்கும் சக்தியற்றது. நன்றியுணர்வு முதலான சில நற் பண்புகளைக் கொண்டிருப்பினும், பசு, குதிரை, யானை போன்ற விலங்குகளோடு ஒப்பிடும்போது, நாய் அவற்றிற்குண்டான உயர்வுகளற்ற விலங்கு. அது தூய்மையற்றதோடு அன்றி அதனைத் தீண்டு பவனுக்கும் தூய்மை கெட்டு விடும். அது தீண்டின பொருளும் தூய்மை கெட்டுக் கைவிடப்படும். "வளர்த்தவனுக்கும் தொட்டால் குளிக்க வேண்டும்

படியான தண்மையுடைய பதார்த்தம்" என்று நாயின் தாழ்வு பற்றி அருளிச் செய்கிறார் பெரியவாச்சான் பிள்ளை (திருமாலை 28ஆம் பாசுர வ்யாக்யானம்).

ஜ்ஞானிகளே தம்மைத் தாழ்வுடையவர்களாகச் சொல்லும்போது தம்மையே நாயாகக் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். தொண்டரடிப்பொடியாழ்வார் *"நாய்களோம் சிறுமை"* (திருமாலை 28) என்றும், திருமங்கையாழ்வார் *"அடிநாயேன்"* (திருநெடுந் தாண்டகம் 29) என்றும் தங்களையே நாய்கள் என்று கூறிக்கொண்டு தாழ்ச்சியை வெளியிட்டனர்.

மேலும், இத்தகைய தாழ்வுகளைக் கருதாது விட்டாலும், திருக்குருகூரில் வாழ்ந்த நாய் முக்தி அடையச் சாதனமாக ஏதேனும் தர்மத்தைச் செய்ததா, அல்லது ஸ்ரீகஜேந்த்ராழ்வான் எனும் யானையைப் போல் தொண்டு புரிந்து எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றியதா என்று நோக்கினால், வீதிகளில் சுற்றித் திரிந்து எச்சில் இலையில் மிஞ்சிய உணவை உண்ட செயலே உள்ளது. எச்சில் உணவை உட்கொள்ளல் தகாது என்றும், தர்மமன்று என்றும் சாஸ்த்ரத்திலே தெளிவாக விதிக்கப்பட்டிருக்கிறது.



பத்நீம் பரித்யஜ்யஸ வீதராக3:
ஸ்ரீதே3வராஜம் ப்ரணிபத்ய தஸ்மாத்।
து3ர்யாச்ரமம் ஸ்வீக்ருதவாந் த3தெ3ள
ஸ தேவோऽபி தஸ்மை யதிராஜநாம ॥

(50)

இல்லறத்தில் வைராக்யமடைந்த அந்த இராமாநுஜர் மனைவியைக் கைவிட்டு ஸ்ரீதேவராஜப் பெருமாளை வணங்கி, அவரிடமிருந்தே ஸந்யாஸாச்ரமத்தை ஏற்றுக் கொண்டார். அப்பெருமானும் அவருக்கு "யதிராஜர்" என்னும் திருநாமத்தை அளித்தான்.

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப்படுத்தவும். மேலும், chiefeditortpt@gmail.com எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.

எங்கள் முகவரி :

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

இத்தகைய தடைகள் இருப்பினும், அதனையும் மீறி அந்த நாய் உயர்ந்த ப்ரஹ்ம ஜ்ஞானிகளுக்கும், தேவர்களுக்கும் அறிதான முக்தியையே பெற்றது, அது முக்தி பெற்றதற்கு எதனாலும் பழுது அடையாததாய், வலிமைமிக்க சாதனமாகவிருந்தது சடகோபர் எனும் நம்மாழ்வாரின் இன்னருளே ஆகும்.

இயற்கையில் தாழ்ந்த பிறவியாயிருப்பினும் உயர்ந்த ஆசார்யருடன் தொடர்பு கிட்டினால் அதனாலேயே எம்பெருமான் மகிழ்ந்து அருள் பொழிகிறான். இதில் மனிதன், விலங்கு என்ற வேறுபாடே இல்லை. *பசுர்மநுஷ்யபசுர்வா யே ச வைஷ்ணவஸம்ச்ரயா:। தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ:பரமம்பதம்॥* (சாண்டில்ய ஸ்ம்ருதி 1.15) எனும் ப்ரமாணம் இங்கு குறிக்கொள்ளத் தக்கது. ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சார்ந்துள்ள விலங்கு, மனிதன், பறவை போன்ற எந்தவொரு ஜீவனும் அந்தந்த நிலையிலிருந்தே பரமபதத்தை அடைகிறது என்பது இதன் கருத்து.

"கண்டுகொண்டென்னை காரிமாறப்பிரான் பண்டை வல்வினை பாற்றியருளினான்" (கண்ணிநுண் சிறுத்தாம்பு 7) என்று மதுரகவி ஆழ்வார் தம்முடைய பழையதான, வலியதான பாவங்களை நம்மாழ்வார் மிக்க கருணையினால் போக்கியருளியதாகத் தெரிவிக்கிறார். அப்படிப்பட்ட

பாவங்கள் ஒழிந்தால் முக்திக்குத் தடையானவைகள் அனைத்தும் ஒழியப் பெறும். ஆகவே, எம்பெருமான் நம்மாழ்வாரோடு உண்டான தொடர்பினைக் கருதி மிகவும் மகிழ்ந்து முக்தி அருள்கிறான்.

எச்சில் உணவை உண்பது மனிதர்களுக்குத் தான் தர்மமன்று. நாய் முதலான விலங்குகளுக்கு இந்த விதி பொருந்தாது. மேலும், இதன் தொடர்பில் விதி விலக்கும் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, எம்பெருமான், அறநெறியில் ஒழுகும் பெற்றோர்கள், ஆசார்யன், ப்ரஹ்மஞானி, பாகவதர்கள் ஆகியோர் அமுதுசெய்து (உண்டு), மிஞ்சியுள்ள உணவையும், அவர்களின் எச்சில்பட்ட உணவையும் ஒருவன் உண்பது தர்மமேயாகும். அவர்கள் அமுதுசெய்து மிகுந்த உணவு "சேஷ ப்ரசாதம்" என்று வழங்கப்படுகிறது. *''த்வதீய புக்தோஜ்ஜித சேஷபோஜிநா''* (ஸ்தோத்ர ரத்னம் 42) என்று எம்பெருமானின் சேஷ ப்ரசாதத்தையே தமது உணவாகக் கொண்டிருப்பவர் சேனை முதன்மையார் என ஆளவந்தார் அருளிச்செய்து உள்ளார். அதன் விளக்கவுரையில் ஆசார்யர்கள் மேற்கண்ட விதிவிலக்கின் கருத்தை விளக்கியுள்ளனர்.

"போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே" (திருமாலை 41) எனும் பாசுரத்தில் எம்பெருமான் இடத்தில் வேறுபயனைக் கருதாமல் பக்திபூண்ட பாகவதர்கள் அமுதுசெய்து மிஞ்சிய சேஷப்ரசாதம் மிகவும் தூய்மையானது என்றும், கிடைப்பதற்கு மிகவும் அரிதென்றும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்து உள்ளார். *''உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்''* (திருவாய்மொழி 6.7.1) என்றிருந்த நம்மாழ்வார் அமுதுசெய்து மிஞ்சிய சேஷப்ரசாதம் மிகவும் தூய்மையானது என்பதில் ஐயமே இல்லை.

திருக்குருகூரில் வசித்து முக்தி பெற்ற நாய் ஆழ்வாரின் சேஷப் பிரசாதத்தை உண்டதாகக் கூறப் படவில்லை. திருக்குருகூரில் ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்து மிஞ்சிய சேஷப்ரசாதத்தையே உண்டு தூய்மை பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அவ்வூரில் ஸ்ரீவைஷ்ணவர்களும் ஆழ்வாரைச் சார்ந்தவர்களாய், ஆழ்வாருக்கு உண்டான பெருமைகளையும் பேற்றையும் பெறுகிறார்கள்.

"கேசவன்தமர் கீழ்மேல் எமரேழெழு பிறப்பும் மாசதிரிது பெற்று" (திருவாய்மொழி 2.7.1) என்று தம்முடன் தொடர்பு கொண்டுள்ள முன்பின் ஏழேழு தலைமுறையினரும் தம்மோடொத்த சிறந்த ஸ்ரீவைஷ்ணவர்களாய்த் திகழ்கிறார்கள் என்று நம்மாழ்வாரே அருளிச்செய்துள்ளார் அன்றோ?.

அப்படி சீர்மை வாய்த்திருப்பவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களின் தொடர்பை, அவர்களின் சேஷப்ரசாதத்தையே தான் தரிப்பதற்கு உணவாகக் கொண்டு பெற்ற ஒரு நாயிடமும் ஆழ்வார் உகப்படைய, அதைக் கருதி எம்பெருமான் மிகவும் மகிழ்ந்து அது முக்தியடையும்படியாக அருள் பொழிந்துள்ளார்.

தொடரும்...

தற்போது விற்பனையில்

திதி.தி.தே. தமிழ்ப் பஞ்சாங்கம்



திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் பஞ்சாங்கம் வெளியிடப்படுகிறது. பராபவ வருட (2026-2027) பஞ்சாங்கம் தற்போது விற்பனையில் உள்ளது. இந்த பஞ்சாங்கத்தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த விஷயங்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய விஷயங்களுடன் தற்போது விற்பனையில்...

மேலும் விவரங்களுக்கு :

துணை செயலாட்சித்தலைவர், தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம்,

தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை, திருப்பதி-517 501. தொ.எண்.0877-2264209

அன்னமய்யாவின் சிறப்பு மிக்க கீர்த்தனைகள்



"பதகவிதா பிதாமகன்" என்று சங்கீர்த்தனம் கேட்கும் அத்துனை பேர்களாலும் போற்றப்படும் தாள்ளப்பாக்கம் அன்னமய்யா அவர்களின் கீர்த்தனைகளின் சிறப்பைப் பற்றி புதிதாக எதுவும் சொல்லவே வேண்டாம். இவருடைய பாடல்கள் அனைத்துமே திருவேங்கடமுடையானைத் துதிப் பவை அல்லது தத்துவங்களைப் போதிப்பவை. அவற்றில் திருவேங்கடமுடையானும் பத்மாவதித் தாயாரும் சிருங்கார ரசத்தில் பாடுவதாக அமைந்த பாடல்களும் உண்டு. எளிமையாக பாமரர்களும் புரிந்து கொள்ளக்கூடிய பாடல்களும் உண்டு. பெரிய தத்துவங்களை மிக எளிய வார்த்தைகளில் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதியவை அவை.

சங்கீதத்திற்கு மொழியே கிடையாது என் னும் வார்த்தைக்கு இணங்க இவருடைய பாடல் களை கேட்டாலே போதும், நமக்குப் புரிந்து விடும். இவற்றிற்கு பொருள் யாரும் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இவர் 32,000 பாடல்கள் பாடி இருப்பதாகச் சொல்லப்படு கிறது. ஆனால் நமக்கு கிடைத்துள்ளவை 12000 மட்டுமேதான்.

அதிலும் இவருடைய அசலான மெட்டுக் கள் நமக்கு கிடைக்கவில்லை. எனினும், பல பாடகர்கள் அந்தப் பாடல்களுக்குப் பொருத்த மான ராகங்களில் அவற்றைப் பொருத்திப் பாடி பிரபலப்படுத்தி இருக்கிறார்கள். அவர்க ளில் மிக முக்கியமானவர் பாரத ரத்னா எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள்.இவருடைய பல பாடல்கள் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்தமானவைகளாக இருக்கின்றன. சில பிரபலமான பாடல்லின் இனிமையை இங்கு நாம் ரசிப்போம்.

எம்.எஸ். சுப்புலட்சுமி பாடியவற்றில் "ஸ்ரீமந்நாராயணா" என்னும் பாடல் மிகப் பிரபலமானதாகும். பூபாளத்தில் பகவானை துயில் எழுப்பும் விதத்தில் மிகவும் மென்மையான ஒரு பாடல். இந்தப் பாடலில் *"திருவேங்கடகிரி தேவா"* என்ற கீர்த்தனையைப் பாடும் இடத்தில் எவருக்காயினும் கண்களில் நீர் ததும்பி விடும். இன்னும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பாடக் கூடியவை என்று பார்த்தால், "டோலாயம்" ஊஞ்சல் சேவைக்கு, "க்ஷீராப்தி கன்யகு" தாயாருக்கு ஆரத்தி எடுக்க, இன்னும் இதுபோல் பலவும் உள்ளன,

"எந்த மாத்ரமுன" இந்தப் பாடல் முதல் பகுதி ப்ருந்தாவனசாரங்காவிலும், அடுத்தப்பகுதி மாய மாளவகௌள ராகத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் எவர் என்ன நினைத்துக் கொண்டு பார்க்கிறார் களோ அதைப்போல திருவேங்கடவன் காட்சி அளிப்பான் என்னும் உண்மையை மிக எளிமையாக ஒரு உதாரணத்தினால் சொல்கிறார். கங்கை நதி பிராந்தியத்தில் எந்த இடத்தில் தோண்டினாலும் கங்கை ஜலம்தானே வரும் என்று சொல்கிறார். இந்தப் பாடலை இந்த ராகங்களில் மனம் உருகி பாடினால், கேட்பவர்களும் அவர் சொல்லும் அந்த பாவனையை மிக அழகாகப் புரிந்து கொள்வார்கள்.

"ஜோஅச்சுதானந்த" பாடல் பகவான் உறங்கச் செல்லும் முன் பாடப்படும் பாடல். இது ஒரு சிறு குழந்தைக்கு ஏற்றது. இந்த இடத்தில் இன்னொன்று சொல்ல வேண்டும். திருவேங்கடவனைப் பற்றி மட்டுமின்றி நரசிம்மர், கிருஷ்ணர் மீது என நிறைய பாடல்கள் பாடியுள்ளார். ஆனால், பெரும்பாலான பாடல்கள் திருவேங்கடவனைப் பற்றியும், பத்மாவதித் தாயாரைப் பற்றியும் உள்ளன. அவற்றில் எத்தனையோ பாடல்கள் எம்.எஸ். சுப்புலட்சுமி குரலில் பிரசித்தம் ஆகியிருக்கிறது. "மனுஜுடை புட்டி", "நமோ நமோ ரகு குல நாயக" இதே போல் மிகப் பல பாடல்கள்.

அடுத்ததாக ஷோபா ராஜு அவர்கள் "அன்னமய்யா பாவ வாகினி" என்ற பெயரில் ஒரு கல்விக்கூடத்தை நிறுவியுள்ளார். அதில் முக்கிய மாகச் சொல்லிக் கொடுக்கப்படுபவை அன்னமய்யா வின் பாடல்கள். இவற்றாலேயே ஒருவருக்கு மனச் சாந்தியும், உடல் ஆரோக்கியமும் கொடுக்க முடியும் என்பது அங்கு நிரூபிக்கப்படுகிறது. அவர் பாடி புகழ் பெற்ற பாடல்கள் என்றால் "வேடு கொண்டாமா", "பொட கண்டிமையா", "அன்னிமந்த்ரமு", "நாண்டி ப்ரதுக்கு", "தேவதேவம்", "நிகமா நிகமாந்த", "வின்ன பாலு வின்ன வலே", "சிறுத்த நவ்வுல வாடே சின்னக்கா", "அதிவொ அல்லதிவோ" இன்னும் ஏராளமானவை உள்ளன.

பத்மஶ்ரீ கரிமல பாலகிருஷ்ணா அவர்கள் பாடி உள்ள "வினரோ பாக்யமு", "பொடகண்டி மய்யா", "பலுகு தேனெல தல்லி" ஆகியவை எல்லாராலும் பாடப்படுபவை. "ப்ரம்மமொகடே" பாடலை கைத் தாளம் போட்டு கூடப் பாடி ரசிக்காதவர்களே கிடையாது.

பத்மஶ்ரீ நேதனூரி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஏராளமான அன்னமய்யா பாடல்களை மெட்டு அமைத்து பாடியுள்ளார். அவருடைய சீடர்களான மல்லாடி சகோதரர்கள் பல இடங்களில் பாடி பிரசித்தி செய்து வருகிறார்கள்.

மிக அழகான பாடல் "தெலிஸிதேமோகூழமு" ஹம்ச நாதத்தில் அமைந்த இப்பாடலை ஒருமுறை கேட்டவர்கள் திரும்பத் திரும்ப கேட்க ஆசைப் படுவார்கள். கமாசில் மாத்திரமே இருபது பாடல் களை மெட்டமைத்து உள்ளார். அவர் மொத்தம் 2000 பாடல்களுக்கு இசை அமைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். "ஆதி தேவா பரமாத்மா பலுகு தே னெல்ல தல்லி" பாடல்கள் அவரால் வெளியே வந்தவை.

பாடகி ஜோதிர்மயி சவுத்ரி அவர்கள் "அந்தயு நீவே", "பிடிக்கு தலம்ப்ரால", "நரஹர நரசிம்ஹா சரணு சரணு ஸுரேந்திர ஸன்னுத" போன்ற நிறைய பாடல்களை மிக இனிமையாகப் பாடி அனைவரும் ரசிக்கும்படி செய்து இருக்கிறார்.

பிரியா சகோதரிகள் அன்னமய்யா பாடல்களை நிறைய எண்ணிக்கையில் பாடியிருக்கிறார்கள். அவற்றில் அநேகம் பேர் பாடுபவை "கட்டெதிரே வைகுண்டம்", "ஜெய கோவிந்த ஹரே", "ஸுலதா ஜென்மமோனு ஜெகதபு சனவுல". இவைதவிர நிறைய பாடல்கள் நாம் அன்றாட வாழ்க்கையில் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். "ஏமகோ", "குலுகக நடவரோ", "ஒகபரிகொக்கபரி" போன்ற பாடல்கள் அபிநயத்திற்கும் ஏற்றவையாக உள்ளதால் அடிக்கடி இவற்றை நடனமேடைகளிலும் அனுபவிக்கிறோம்.

அன்னமய்யாவின் பாடல்களில் இன்னொன்றும் நாம் கேட்டு ஆனந்தப் படலாம். "முத்துகாரே யசோதா" என்ற பாடலில் நவமணிகளின் பெயரை யும், "இந்தரிகி அபயம்பு" என்ற பாடலில் தசாவதா ரத்தையும் சொல்லி இருக்கிறார். அன்னமய்யாவின் எத்தனையோ பாடல்களில் அவருடைய சொந்த மெட்டுக்கள் போனாலும் இப்பொழுது பாடப்படும் பாடல்களையாவது காப்பாற்றி, வரும் சந்ததியி னருக்கு கொடுப்பது நம்முடைய கடமை ஆகும்.

திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்,
81256 16876

குறுக்கெழுத்துப் புதிர் -118

இடமிருந்து வலம்

01. அண்டை மாநிலத்தில் ஆமை வடிவ அவதார ஸ்வாமி...(12)

04. தேவர்கள் ஒருபுறமும், அசுரர்கள் மறுபுறமும் பாற்...(9)

06. ...(4) மரம் பாற்கடலில் இருந்து தோன்றியது.

11. பாற்கடலில் இருந்து அமிர்த கலசத்துடன் தோன்றியவர்...(6)

13. வாசுகி பாம்பின்...(6) யைப் பிடித்து அசுரர்கள் பாற்கடலைக் கடைந்தனர்.

15. பாற்கடலைக் கடைந்த போது, கடலில் இருந்து...(8)கள் தோன்றினர்.

வலமிருந்து இடம்

05. தேவ அசுரர்களுக்கு அமிர்தத்தைப் பங்கிட திருமால் எடுத்த தோற்றம்...(7)

07. மஹாவிஷ்ணு எடுத்த ஆமை வடிவம்...(8)

09. ஏழு தலைக்குதிரையான ...(3) சிரவஸ், கடலில் இருந்து வந்ததை மகாபலி எடுத்துக் கொண்டார்.

10. பாற்கடலைக் கடைய...(5) ஸ்ரீஹரி ஆமை வடிவெடுத்து வந்தார்.

14. கடலில் இருந்து வெளி வந்த தெய்வீகப்பசு...(4)

18. கடலைக் கடைந்திட கயிறாகப் பயன்பட்ட பாம்பு...(9)

மேலிருந்து கீழ்

01. கூர்ம அவதாரம் தோன்றிய மாதம் மற்றும் நாள்...(12)

02. கூர்ம அவதாரத்தில் தரிசனம் அளிக்கக் கூடியது...(7)



தொகுப்பு : திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர்,
வல்லம், 99426 44807.

புதிருக்கு விடை இந்த இதழிலேயே உள்ளது.
வாசகர்கள் சரி பார்க்கவும்...

03. பாற்கடலைக் கடைந்திட மத்தாகப் பயன்பட்டது...(6)

08. கடலில் இருந்து வெளிவந்த வெண்ணிறமான...(5) என்கிற யானையை இந்திரன் கைப்பற்றினான்.

12. கூர்மம் என்பது...(2)

கீழிருந்து மேல்

15. ...(5)பெறுவதற்காக தேவ அசுரர்கள் பாற்கடலைக் கடைந்தனர்

16. மகாவிஷ்ணுவை மணப்பதற்காக பாற்கடலில் இருந்து வந்தவர்...(10)

17. திருமால் மோகினி வடிவத்தில் ...(7) மட்டும் அமிர்தத்தை வழங்கினார்.

18. வாசுகி பாம்பின் ...(6)ப் பிடித்துக் கொண்டு தேவர்கள் பாற்கடலைக் கடைந்தனர்.

ஓசையில் ஒளிந்து இருக்கும் ஆரோக்கியம்

இந்த உலகம் ஒலிமயமானது. 'அ'கார, 'உ'கார, 'ம'கார ஒலிகள் இந்தப் பிரபஞ்சத்தின் ஆதிமுதல் அந்தம் வரை ஓயாமல் நாராயணனின் அருளால் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. காலத்தின் பரிணாம வளர்ச்சியில் பலவிதமான ஒலிகளை நாம் கேட்கின்றோம். நம் பாரதத்தின் பெருமைகளில் ஒலிகளின் வகைகளும், அதன் பெருமைகளும் அளப்பரியதாகும். மங்கல வாத்தியம் தொடங்கி வாழ்வின் பிறப்பு முதல் இறுதி வரை ஒலியோடு நாம் வாழும் முறையை ஏற்படுத்தி வகைப்படுத்தி நம் முன்னோர்கள் வாழ்ந்து காட்டி உள்ளார்கள்.

ஒலியால் ஆரோக்கியம் பெறுதல்

ஓசையின்றி ஓர் அணுவும் அசையாது. காற்றின் ஓசை,கடலின் ஓசை, பறவைகளின் ஓசை, இசைக் கருவிகளின் ஓசை, மக்களால் பேசப்படுவதும், பாடுவதும் என பலவிதமான ஓசைகளால் நாம் சூழ்ந்துள்ளோம். எந்த ஓசை பதைபதைப்பான மனதைக் கூட பக்தியில் ஆழ்த்துகிறதோ, அமைதிப்படுத்துகிறதோ, மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறதோ, மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கிறதோ, தைரியத்தைக் கொடுக்கிறதோ, அந்த ஓசை, ஒலி ஆரோக்யத்தை மேம்படுத்துவது ஆகும்.

ஓசை உடலில் உபாதை ஏற்படுத்துமா?

ஆம். ஓசையின் அலை இதயத்தின் உள்ளே சென்று இரத்தத்தின் வழியாக உடலில் வியாபிக்கும். அதனால் தான் இசையைக் கேட்கும் போது இன்பம் உணர முடிகிறது. யாரேனும் கதறி அழுதால் நம் மனமும் துயருற்று நம் முகத்தில் துக்கம் வெளிப்படுகிறது. மிகவும் கடுமையான ஓசைகளை, மிகவும் சப்தமாகக் கேட்கும் போது உடல் பலவீனமானவர்கள், நோய் வாய்ப்பட்டவர்கள் மட்டுமல்லாமல் இரத்த குறைபாடு உள்ளவர்கள், கூனர்கள் மற்றும் வயதானவர்கள் என அனைவருக்கும் பதட்டம், பதைபதைப்பு, படபடப்பு என அனைத்தையும் ஒருசேர உணரும் போது பய உணர்வு அதிகமாகிறது.

இந்த பய உணர்வினால் மக்களும் தம் அன்றாட வாழ்வில் எச்செயலைச் செய்யவும் தயக்கம், பதட்டம், பயம், அனைவரிடமும் பேச இயலாமை, தனித்து இருக்க விரும்புவது போன்ற உணர்வுகள் ஏற்படும். இந்த குணங்கள் உடல் நிலை பாதிப்பை உணர்த்துவதாகும். பய உணர்வினால் தூக்கம் பாதிக்கப்படுகிறது. அதன் விளைவாக உடலில் பலவிதமான உபாதைகள் ஏற்படுத்துகிறது.





ஆயுர்வேதம் சொல்வது யாதெனில் மூளைக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்க ஒலிகளும், இசையும் பயன்படும். இது நமது உடம்பின் அனைத்து செயல் பாடுகளுக்கும் மையமாக உள்ளது. இது நேர் மறையை உருவாக்கும் மற்றும் எதிர்மறையைக் குறைக்கும் அதிர்வுகளுடன் உணர்ச்சிகளை உரு வாக்கி கட்டுப்படுத்தி மூளையின் அனைத்து பகு தியையும் தூண்டுகிறது. குறிப்பிட்ட ஒலிகள் அதா வது இசை அல்லது மந்திரங்கள் உடலின் ஆற்றல் மையங்கள்/சக்கரங்களை அடைந்து சம நிலையை உருவாக்கி ஒட்டுமொத்த உயிர்ச் சக்தி மற்றும் ஆற்றல் ஓட்டத்தை ஊக்குவிக்கும்.

இனிமையான ஒலிகள் மனதை அமைதியான நிலையை அடைய உதவுகின்றன. இது இரத்த அழுத் தத்தை சமநிலைப்படுத்தவும், இதய படபடப்பைக் குறைக்கவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது. அதனால்தான் ஒலி சிகிச்சை உங்கள் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்தவும், பதட்டத்தை போக்கவும், அதன் மூலம் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்தவும் இசை உதவுகிறது.

ஓசைக்கும் இசைக்கும் உள்ள சம்பந்தம்

ஓசைகள் (உதாரணமாக இயற்கையின் சத்தம்) மற்றும் இசை இரண்டும் மனித மனத்தில் மகிழ்ச்சி, சோகம், பயம் போன்ற உணர்வுகளைத் தூண்டும் திறன் கொண்டவை. பேச்சும் பாடலும் ஓசையின் வழித்தோன்றல்கள். ஓசை நயமிக்க சொற்கள் மற்றும் எழுத்துக்கள் பாக்களாக, இசையாக மாறுகின்றது. ஓசையின்றி இசையில்லை. ஓசை அலைகள் காதுக ளில் விழுந்து, மூளையில் உணர்வுகளைத் தூண்டு கின்றன. மந்திரங்கள் போன்ற மீண்டும் மீண்டும் வரும் ஓசைகள் உடலை ஒரு குறிப்பிட்ட லயத்திற்கு மாற்றுகின்றன. இதுவே இசையின் ஆரம்பமாக அறியலாம்.

ஆயுர்வேதம் ஒலியை அல்லது ஓசையை (இசை/நாதம்) ஒரு சக்திவாய்ந்த சிகிச்சை அதிர்வாகக் கருதுகிறது. இது தோஷங்கள் மற்றும் சக்கரங்களை பாதிப்பதன் மூலம் உடலையும் மனதையும் குணப்படுத்தும் திறன் கொண்டது. இது வாதத்தை (நரம்பு மண்டலம்) சமநிலைப்படுத்தவும், நச்சுக்களை வெளியேற்றவும் உதவுகிறது. மந்திரங்கள் மற்றும் இசைக்கருவிகள் மூலம் மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

ஒரு நாளைக்கு ஒருவர் இவ்வளவு ஒலியைத் தான் கேட்க வேண்டும் என்று வரையறை உள்ளது. இதைவிட அதிகமான சத்தத்தை கேட்கும் போது நரம்பு செல்களைப் பாதித்து செவிட்டுத்தன்மை உருவாகிறது. சாதாரணமாக 60 முதல் 70 டெசிபல் சத்தத்தைக் கேட்பதால் பிரச்சினை ஏற்படுத்துவது இல்லை. அதற்கு மேல் மிகையான சத்தத்தைக் கேட்கும் போது காது நரம்புகள் பாதிப்படைகின்றன.

அதிக இரைச்சல் மிகுந்த பகுதியில் பணியாற் றும் போது, சத்தத்தைக் குறைக்கும் உபகரணங் களைப் பயன்படுத்துவது அவசியம். வேலையின் இடையே குறிப்பிட்ட மணி நேரத்திற்கு ஒருமுறை சற்று நேரம் இரைச்சல் இல்லாத இடங்க ளில் ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியம். நாள் முழுவதும் மனது, இதயப் படபடப்புடன் பணி செய்து மீண்டும் மாலையில் அதிக இரைச்சலான சத்தத்தில் தொடர்ச்சியாகப் பயணிப்பதாலும் சோர்வு, மன அழுத்தம், இதய பலவீனம், காது கேளாமை போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மேற்கண்ட காரணங்கள் யாவும் நரம்பை பாதித்து அதன் மூலம் கேட்கும் திறன் குறைந்து விடுகிறது. இதுதவிர காது சவ்வு பாதிப்பு, காது எலும்புகள் பாதிப்பு, காதில் சீழ்பிடித்தல், காது சவ்வில் ஓட்டை விழுதல், அதிக இரைச்சல் காரண மாக காதுகேட்கும் திறன் பாதிப்படைகிறது. அதிக களைப்புடனும், மனச் சோர்வுடனும், ஏமாற்றத் துடனும் இருக்கும் மனிதர்கள் தங்களையே மறந்து இசையிலே லயித்தால் அவர்களது களைப்பு தீரும். மனச் சோர்வு போகும். ஏமாற்றங்கள் மறக்கப்படும்.

2012 ஆம் ஆண்டு இந்தியன் ஜர்னல் ஆஃப் சர்ஜரி ஒரு ஆய்வை வெளியிட்டது. அதில் ஆனந்த பைரவி ராகத்தின் வெளிப்பாடு அறுவை சிகிச்சைக்குப் பின் வலி மேலாண்மையில் நேர்மறை யான விளைவைக் காட்டியது. அறுவை சிகிச்சைக்குப் பின் மூன்று நாட்களுக்கு ராகத்தைக் கேட்டவர்களுக்கு வலி நிவாரணி தேவையில் 50% குறைப்பு இதற்கு சான்றாகும். மற்றொரு ஆய்வில், 40 நோயாளிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப் பட்டனர். மனநல மருத்துவர்கள் பரிந்துரைத்த நிலையான நெறிமுறைகளின்படி இரு குழுக்களும் மருந்தியல் சிகிச்சையைப் பெற்றனர். 20 நோயாளி கள் ஒரு மாதத்திற்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை 15–20 நிமிடங்கள் சங்கராபரணம் கேட்க

அறிவுறுத்தப்பட்டனர். மீதமுள்ள 20 பேர் கல்யாண வசந்தத்தைக் கேட்கச் சொன்னார்கள். மனச் சோர்வின் தீவிரம் மறு மதிப்பீடு செய்யப்பட்டது. பெரும் பாலானவற்றில் அறிகுறிகளில் முன்னேற்றம் காணப்பட்டது, இது அவர்கள் பெற்ற மன அழுத்த எதிர்ப்பு மருந்துகளின் அளவைக் குறைக்க முடிந்தது.

ராகங்களை நேரத்தின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். அதாவது பூபாளம் மற்றும் பவுலி போன்ற காலை ராகங்கள், பீம்பலாசி மற்றும் பிருந்தாவாணி சாரங் போன்ற பிற்பகல் ராகங்கள், ஹமீர் கல்யாணி மற்றும் துர்கா போன்ற மாலை ராகங்கள் மற்றும் சிலவற்றைக் குறிப்பிட, குருஞ்சி மற்றும் நீலாம்பரி போன்ற இரவு நேர ராகங்கள் என பெரியோர்கள் வகைப்படுத்தி உள்ளனர். மூளையின் சில பகுதிகளைத் தூண்டி, மகிழ்ச்சி ஹார்மோன்களான எண்டோர்பின்களை வெளியிடுகின்றன, அவை ஒரு நபரின் மனநிலையை உயர்த்துகின்றன. சுபபந்துவராளி மற்றும் சிவரஞ்சனி போன்ற ராகங்களால் சோக உணர்வு ஏற்படுகிறது. அதே நேரத்தில் மோகனம் மற்றும் கதனகுதூகளம் போன்ற ராகங்கள் மகிழ்ச்சியைத் தூண்டுகின்றன.

வியாதிகளை குணப்படுத்தும் முக்கிய ராகங்கள்

பைரவி : புற்று/காசநோய், கடுமையான சளி, சைனஸ், பல் வலி. தோடி : இரத்த அழுத்தம், தலை வலி, சளி, ஒற்றைத் தலைவலி. தர்பாரி : மன அழுத்தம், பதற்றம், மன அமைதி, தூக்கமின்மை. பகேஸ்ரீ : நீரிழிவு, இரத்த அழுத்தம், மன அழுத்தம். அமிர்தவர்ஷினி : உடல் வெப்பம் சார்ந்த நோய்கள். ஆனந்த பைரவி : வயிற்று வலி, சிறுநீரகக் கோளாறுகள், ரத்த அழுத்தம். ஹிந்தோளம் : ரத்த சுத்திகரிப்பு. பிருந்தாவன சாரங்கா : நரம்பியல் பாதிப்புகள்.

இந்த ராகங்களை முறையாகக் கேட்பது அல்லது பாடுவது நரம்பு மண்டலம், மனம் மற்றும் சுவாசத்தை சீராக்கி சிகிச்சை அளிப்பதாகக் கருதப்படுகிறது. இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கு நரம்பு, இதயம் மற்றும் காது சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் இன்றி பிறப்பதற்கு ஓசையில் ஒளிந்திருக்கும் ஆரோக்கியத்தை அறிந்து, நலமுடன் வாழ்வதே சிறப்பு.

ஆரோக்கிய பாதையில் பயணிப்போம்...

ஆயுர்வேத மருத்துவர்
டாக்டர்.கி.ஐ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234



77. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் திவாகரர்கள் என்று வருணிக்கப்படுபவர்களான உலக ப்ரஸித்தி பெற்ற ஆழ்வார் ஆசார்யர்கள் யாவர்?

ராமதிவாகரர், அச்சுத பாஸ்கரர், வகுள பூஷணபாஸ்கரர், கவிலோக திவாகரர், ராமாநுஜ திவாகரர்.

78. ஆசார்ய ரத்ன ஹாரத்தில் 4 மற்றும் 14 ஸ்தானங்களை அலங்கரித்த ஆழ்வார் ஆசார்யர்கள் யாவர்?

நம்மாழ்வார், நம்பிள்ளை.

79. பகவத் ராமாநுஜருக்கு கீழ்க்காணும் திருநாமங்கள் அருளிய எம்பெருமான்கள் யாவர்?

யதிபதி – வரதராஜ ஸ்வாமி. உடையவர் – ரங்கநாதன், தேசிகேந்த்ரன் – ஸ்ரீநிவாஸன், பூதபுரிசர் – ஆதிகேசவப்பெருமாள்.

80. ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:। ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்தர்த்தா நாஸ்தி ஸம்சய:॥ பகவத் ராமாநுஜர் விஷயமாக இந்த திவ்ய சுலோகத்தை அநுக்ரஹித்த பூர்வாசார்யர் யார்?

கணியனூர் சிறியாச்சான்

81. ஸ்ரீமத் சடகோபமுனி மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்கள் எத்தனை?

36 திவ்யதேசங்கள். (2 – திருவிருத்தம், 34 – திருவாய்மொழி)

- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.
தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.



மே 2026
ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

மேஷம்

தொழில் வளர்ச்சிக்காக செலவுகள் அதிகமாகும். அலைச்சல் காரணமாக உடல் உஷ்ணமாகும். காரமான பொருட்களை சாப்பிடுவதைத் தவிர்க்கவும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். புது முயற்சிகளைத் தவிர்க்கவும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

ரிஷபம்

புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். குழந்தைகள் கல்விக்காக செலவுகள் அதிகமாகும். தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் திருஷ்டி உண்டாகும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. நண்பர்கள் உறவினர்களால் சிறு பிரச்சனை ஏற்படும். எதிர்பார்த்த நல்ல பலன்கள் பெறும் மாதம் இது.

மிதுனம்

மாதத்தின் முற்பகுதியில் நல்ல லாபமும், பிற்பகுதியில் சுபச் செலவும் உண்டாகும். தொழிலில் அலைச்சல் அதிகமாகும். புது முயற்சிகளுக்கு வெற்றி சற்று தாமதமாகக் கிடைக்கும். தோஷ பரிகாரங்கள் செய்வதற்கு ஏற்ற மாதம் இது. குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்படும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. நல்ல ஏற்றம் தரும் இனிய மாதம் இது.

கடகம்

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். குடும்ப உறவுகளுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. பெற்றோரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. செலவிற்கு ஏற்ற வருவாய் உண்டு. புதிய தொழில் முயற்சிகள் செய்யலாம். பேச்சில் மிகவும் நிதானம் தேவை. நல்ல மனிதர்களின் நட்பு கிடைக்கும். மிகவும் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம் இது.

சிம்மம்

மாதத்தின் பிற்பகுதியில் தொழிலில் நல்ல வளர்ச்சி உண்டு. தம்பதிகள் இடையே சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். குடும்ப ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மின்னணு, மின்சாரப் பொருட்கள் பழுதடையும். பூர்வீகச் சொத்துக்கள் விரைவில் கிடைக்கும். முழு முயற்சியுடன் வெற்றி பெறும் மாதம் இது.

கன்னி

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். கல்வி மற்றும் வேலைக்காக வெளியூர் செல்ல வேண்டி இருக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். திருஷ்டியினால் வெற்றி பெற காலதாமதம் ஆகும். உடல் உஷ்ணம் காரணமாக மருத்துவச் செலவுகள் அதிகமாகும். கடும் முயற்சியின் காரணமாக தொழில் விருத்தி ஆகும். எதிர்பார்த்த வெற்றி தாமதமாகக் கிடைக்கும் மாதம் இது.

துலாம்

தொழிலில் பழைய பாக்கிகள் வசூல் ஆகும். மாதத்தின் பிற்பகுதியில் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. பணிபுரிபவர்களுக்கு விரைவில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். தம்பதிகளிடையே சுமூக உறவு உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். சகல துறைகளிலும் வெற்றி பெறும் இனிய மாதம் இது.

விருச்சிகம்

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். பண வரவு குறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குடும்பத்தினரிடம் பேசும் போது விவாதத்தைத் தவிர்க்கவும். செலவிற்கு ஏற்ற வருமானம் கஷ்டப்பட்டு பெறுவீர். பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி தற்போது பேசுவதைத் தவிர்க்கவும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதம் இது.

தனுசு

கூட்டுத் தொழில் விருத்தி அடையும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். பெற்றோரின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. பூர்வீகச் சொத்துக்கள் விரைவில் கிடைக்கும். தர்ம சிந்தனையுடன் செயல்பட்டு காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். படித்த மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். நினைத்தது சாதிக்கும் மாதம் இது.

மகரம்

கடன் வாங்குவதையும், கடன் கொடுப்பதையும் முற்றிலுமாகத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களுடன் பேசும்போது விவாதத்தைத் தவிர்க்கவும். பயணங்களை முடிந்தவரைத் தவிர்க்கவும். தொழிலில் போட்டிகள் அதிகமாகும். மாணவர்கள் நன்கு படித்தால் மட்டுமே சுமாரான மதிப்பெண் பெற முடியும். எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதம் இது.

கும்பம்

செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். தம்பதியர் இடையே இருந்த பிரச்சனைகள் தீரும். படித்த மாணவர்களுக்கு உடனடியாக நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சகல துறைகளிலும் நினைத்தது சாதிக்கும் இனிய மாதம் இது.

மீனம்

வேலைப்பளு அதிகமாகும். வயிற்றுப் பகுதியில் வலி அதிகமாகும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். தொழிலில் கஷ்டப்பட்டு வெற்றி பெறுவீர்கள். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். தூக்கமின்மை உண்டாகும். பெண்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். மிகுந்த முயற்சியுடன் முன்னேறும் மாதம் இது.



முனிவர் வேண்டாத வரம்

சிவ பக்தரான முனிவர் ஒருவர் மரத்தடியில் அமர்ந்து தம் வேட்டியில் இருந்த கிழிசலை தைத்துக் கொண்டு இருந்தார். அப்போது சிவன் மற்றும் பார்வதி வான்வெளியில் வலம் வந்து கொண்டிருந்தனர்.

மரத்தடியில் ஒளிப் பிழம்பாய் அமர்ந்திருந்த முனிவரை கண்டதும், உளம் நெகிழ்ந்த அம்மை, ஐயனைப் பார்த்து 'மரத்தடியில் பார்த்தீர்களா?' என்றாள். பார்த்தேன் என்றார் சிவன். பார்த்த பிறகு சும்மா எப்படிப் போவது? 'ஏதேனும் வரம் கொடுத்து விட்டுப் போகலாம் வாருங்கள்' என்றாள் அம்மை. அட, 'அவன் அந்த நிலையெல்லாம் கடந்தவன். இப்போது அவனிடம் செல்வது வீண்வேலை, வேண்டாம் வா! நம் வழியே போகலாம்' என சிவன் கூறினார்.

அம்மை பார்வதி விடவில்லை. ஐயனை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்து வந்துவிட்டாள். 'வணக்கம், முனிவரே!' என வணங்கினர் அம்மையும் அப்பனும். முனிவர் நிமிர்ந்து பார்த்தார். 'அடடே அப்பனும் அம்மையுமா வரணும் வரணும்' என்று வரவேற்றவர். அத்துடன் தாகத்திற்கு மோர் கொடுத்து உபசரித்தார். அவ்வளவு தான் மீண்டும் கிழிசலைத் தைக்கத் தொடங்கிவிட்டார். சற்றுநேரம் பொறுமையாகக் காத்திருந்து விட்டு, சரி, நாங்கள் விடை பெறுகிறோம் என்றனர் அம்மையும் அப்பனும். மகிழ்ச்சி யாய்ப் போய் வாருங்கள் 'வணக்கம்' என்று சொல்லி விட்டு மீண்டும் கிழிசலைத் தைக்க முனைந்தார் முனிவர். அம்மை குறிப்புக் காட்ட, அப்பன் முனிவரிடம் பணிவாய்க் கேட்டார்.

'முனிவரே நாங்கள் ஒருவருக்குக் காட்சி கொடுத்து விட்டால் வரம் கொடுக்காமல் போவதில்லை. எனவே தாங்கள் ஏதாவது வரம் கேளுங்கள் கொடுக்கிறோம்' எனச் சொல்ல, முனிவர் சிரித்தார். 'வரமா! உங்கள் தரிசனமே எனக்குப் போதும் பரமா! வரம் எதுவும் வேண்டாம். உங்கள் வழியைத் தொடருங்கள்' என்று சொல்லி விட்டுப் பணியில் ஆழ்ந்தார்.

அப்பனும் அம்மையும் விடவில்லை. 'ஏதாவது வரம் கொடுக்காமல் செல்ல மாட் டோம்' என்று அம்மை அப்பன் பிடிவாதமாய் நிற்க, முனிவர் வேறு வழியின்றி ஒரு வரம் கேட்டார். அதன்படி, 'நான் தைக்கும் போது இந்த ஊசிக்குப் பின்னாலேயே நூல் போக வேண்டும். அது போதும்!' என்றார்.

இதைக்கேட்ட அம்மையும் அப்பனும் திகைத்தனர். 'ஏற்கனவே ஊசிக்குப் பின்னால் தான் நூல் போகிறதே! இதற்கு நாங்கள் ஏன் வரம் தர வேண்டும்? என்று அம்மை பணிவாய் கேட்டார்.

'அதைத் தான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்து கொண்டு வந்தால் வர வேண்டிய பலன் நியதிப்படி தானாகப் பின்னால் வருமே. இடையில் நீங்கள் எதற்கு எனக்கு வரம் தர வேண்டும்?' என்று கேட்டார் முனிவர். முனிவரின் விளக்கத்தைக் கேட்ட அம்மையும், அப்பனும் சிரித்துவிட்டு சென்ற னர்.

இதுவே அனைத்தையும் கடந்த நிலை ஆகும். இந்நிலை நமக்கும் வர அதன் மூலம் முக்தி அடைய நாமும் அந்த இறைவனைப் பிரார்த்தனை செய்வோமாக.

டாக்டர் த.வெங்கடேஸ்வரா,
அம்பத்தூர், 9941225157.



சிறுவர்
உலகம்



எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



சித்திரத்தைப் பாருங்கள் !!



வண்ணம் தீட்டுங்கள்



கோடை வெயில் வாட்டி எடுக்கிறது. செடிக்குத் தண்ணீர் ஊற்றச் செல்லும் இச்சிறுமி அந்த பூஞ்செடியைச் சென்றடைய பாதையைக் காட்டுங்கள்!



1 முதல் 16 வரை உள்ள எண்களை இணைத்து பாதையைக் கண்டுபிடி!

→	0	2	9	6		
3	1	2	3	4		
9	8	5	4	3	8	7
10	11	7	8	4	5	9
12	13	14	12	9	6	16
6	4	10	9	8	7	15
11	15	11	12	13	14	10
15	13	12	18	15		
15	14	15	16	→		



சித்திரத்தின் ஆதாரமாக இறைவனை கண்டறி!



சிறார்களே, மேலே உள்ள சித்திரங்களைப் பாருங்கள்! இவற்றைப் பார்த்தால் எந்த கடவுள் உங்களுக்கு நினைவிற்கு வருகிறார்? உங்கள் விடையைக் கீழ்க்கொடுத்திருக்கும் விடையோடு ஒப்பிட்டு பாருங்கள்!



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி போட்டி எண்-46



ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. திருமாலை "பறவையேறும் பரம்புருடா" என்று குறிப்பிட்டவர் .....
2. ஆந்திரமாநிலம், அன்னவரத்தில் அருள்புரியும் திருமால் .....
3. திருமாலை "புள்ளூர் கொடியானே" எனக் குறிப்பிடும் நம்மாழ்வாரின் பிரபந்தம் .....
4. "செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே" என்று பாசுரமிட்டவர் .....
5. பிருகு முனிவரின் செயலால் திருமாலிடம் கோபம் கொண்டவர் .....
6. "மாசறு கேகயன் மாது" என்று அழைக்கப்படுபவர் .....
7. அலர்மேல் மங்கைத் தாயாரால் "தந்தை" என்று அழைக்கப்பட்ட ஆசாரியர் .....
8. நம்மாழ்வாரை "வேதம் தமிழ் செய்த மாறன்" என்று கொண்டாடியவர் .....
9. "எல்லாம் கண்ணன் எம்பெருமானே" என்று கூறும் ஆழ்வார் .....
10. காக்கை வடிவில் வந்து சீதையைத் துன்புறுத்தியவன் .....
11. "கட்டெதிரே வைகுண்டம்" என்று திருமலையைப் போற்றியவர் .....
12. பிரபன்ன ஜன கூடஸ்தர் என்றழைக்கப்படுபவர் .....
13. சீதா தேவியின் முத்துமாலையைப் பரிசாகப் பெற்றுக்கொண்டவர் .....
14. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கூறிய நாயனார் .....
15. பிற்கால சோழப் பேரரசின் தலைநகராக விளங்கிய நகரம் .....



போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.05.2026. விடையை எழுதுங்கள்!

திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!

ஸப்தகிரி சந்தா எண்
போட்டியாளர் பெயர்
ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை
போட்டியாளரின் வயது
போட்டியாளர் முழு முகவரி
தொலைபேசி எண்



சக்கரத்தைச் சுற்றுங்கள்!



அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

விடைகள்

1) ஸுக்ரீவன், 2) ஸுஷேணன், 3) ஹனுமான், 4) ரிஷ்யமூக பர்வதம், 5) ராமர் மீது ராஜ்ஜியம், 6) ஸுக்ரீவனிடமிருந்து, 7) ஜாம்பவான், 8) ஆஞ்சநேயர்.



இங்கு பானைகளில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான குட்டுக்களில் உள்ள விடையைப் பொருத்துக.

கணித விளையாட்டு

1 — 11+22
2 — 53-6
3 — 42-4
4 — 35-5
5 — 23+9

32 — i
33 — iii
45 — v
30 — ii
38 — iv
47 — vi

1) iii 2) vi, 3) iv, 4) ii, 5) i

விடைகள்



நீரிலும், நிலத்திலும் வாழும் உயிரினமான என் முதுகின் மேல் கடினமான ஓடு வைத்திருப்பேன். யாராவது என்னை தீண்டினால் என் தலை, கால்களை ஓட்டின் உள்ளே இழுத்துக் கொள்வேன்.

பாற்கடல் கடையும் போது மேரு மலை அழுத்தத்தின் காரணமாக கடலின் உள்ளே போய் கொண்டிருந்தது. விஷ்ணு மூர்த்தி பாற்கடலில் மேருமலையின் அழுத்தத்தைத் தாங்குவதற்கு என் உடலில் ஏந்து தேவர்கள் அமர்த்தத்தைப் பெரு ஏற்றுக்கொண்டார்.

என் உடலில் உள்ள விஷ்ணு மூர்த்திக்கு பல ஆலயங்களும் உண்டு.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...

விடை : ஆமை

சித்திரக் கதை

உயிரினைக் காத்த சுலோகம்

கதை : கலாரத்னா டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் : திரு.து. சிவாஜி.















மருத்துவர் அரசரின் அறைக்குச் சென்றார். அங்கு சுவற்றினைக் கண்டார். சிகிச்சை செய்வதற்கு முன்பாக சுவற்றில் இருந்த சுலோகத்தைப் படித்தார்.

விஷம் அரசனின் உடலை நீலநிறமாக்கிவிடும். எனவே அனைவருக்கும் தெரிந்து விடும். அதனால் நான் வாழ்வதும் கடினமாகும். எனவே விஷம் தடவிய கத்தியை அருகில் வைத்து விட்டு நல்ல கத்தியால் சிகிச்சை செய்து விடுவோம்.

மருத்துவரே! ஏன் கத்தியை மாற்றினீர்கள்.

அரசே! ஒன்றும் இல்லை... ஒன்றும் இல்லை...

அவ ய ந கர்தவ்யம் கர் தவ்யம்

எதற்காக இவர் பதட்டப்படுகிறார். காரணத்தை கண்டுபிடிப்போம்.

அரசர் மருத்துவரின் அருகில் இருந்த மற்றொரு கத்தியை எடுத்து அருகிலிருந்த பாலில் வைத்தார். சிறிது நேரத்தில் பால் நீல நிறமாக மாறியது.

மருத்துவரே! ஏன் இவ்வாறாகச் செய்தீர்கள்?

அரசே! என்னை மன்னியுங்கள். பணத்திற்காக என் மனம் மயங்கிவிட்டது. தயவு செய்து என்னை சிறைச்சாலைக்கு அனுப்பாதீர்கள். நான் இனி இது போன்று செய்ய மாட்டேன். இங்கிருந்து சென்று விடுகிறேன்.

அவிசார்ய ந கர்தவ்யம் கர்தவ்யம் ஸுவிசாரிதம்

செய்த தவறு வெளியே வந்தது.

காவலர்களே! என்னைக் கொல்ல நினைத்த இந்த அமைச்சரை... இல்லை இல்லை... இந்தத் துரோகியைக் கைது செய்யுங்கள்.

அவிசார்ய ந கர்தவ்யம் கர்தவ்யம் கர்தவ்யம் ஸுவிசாரிதம்

இலக்கியத்திற்குத் தனித்துவமான சக்தி உண்டு. ஒரு மகாகவியின் சுலோகம் இன்று என் உயிரைக் காத்தது. மகாகவியே உமக்கு நன்றி.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _

21-03-2026 அன்று மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு அவர்களின் பேரனும், ஆ.மா. அமைச்சர் திரு. நாரா லோகேஷ் அவர்களின் திருக்குமாரருமான செல்வன் தேவன்ஸின் பிறந்த நாளை முன்னிட்டு திருவேங்கடமுடையானை குடும்பத்தாருடன் தரிசனம் செய்தார். ஒரு நாள் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடை வழங்கி, தனது குடும்பத்தாருடன் அன்னதானக் கூடத்தில் பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் பரிமாறினார். பின்னர் திருமலையில் உணவு பரிசோதனைக் கூடத்தைத் திறந்து வைத்தார். உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், செயலாட்சித்தலைவர் மற்றும் கூடுதல் செயலாட்சித் தலைவர் இருந்தனர்.













SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-04-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

ஸ்ரீவீர வேங்கட
சத்யநாராயண
ஸ்வாமி,
அன்னவரம்,
காகிநாடா



ச்ரியாஸார்தமீசஸ்ஸதாம் ரக்ஷணார்தம் ஸ்வயம் ரத்னசைலே ஸமாவிர்பபூவ
ஸமுத்ஸாஹதோய ஸ்ஸமாச்சர்ய வீரோ பஜே ஸத்யநாராயணம் தம் மஹாந்தம்